பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 05 சனிக்கிழமை (20.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:024

# சுயாதீன ஐ.நா. மதிப்பீட்டுக் குழு வன்னிக்குச் செல்ல அனுமதிக்குக!

## இலங்கையிடம் பிரிட்டிஷ் அரசு வற்புறுத்தல்

லண்டன், டிசெம்பர் 20

யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வன்னியில் இடம்பெயர்ந்து அல்லற்படும் மக்களின் நிலைமைகளைக் கண்டறிந்து , உரிய நிவாரணம் மற்றும் உதவிகளை அவர்களுக்கு வழங்குவதற்கு வசதியாக ஐ.நா. தலைமையிலான அவதானிப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழு ஒன்று அங்கு செல்வதற்கு இலங்கை அரசு அனுமதித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

- இப்படி இலங்கை அரசை பிரிட்டன் தொடர்ந்தும் வற்புறுத்தி வருகின்றது என பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் அந்நாட்டின் இராஜாங்க, வெளிவிவகார மற்றும் பொதுநலவமைப்பு அலுவலக அமைச்சர் பில் றம்மெல் நேற்று முன்தினம் தெரிவித்திருக்கின்றார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு எதுவும் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்ப்பாணத்தில் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு நிலவவில்லை, விற்பனை முகவர்கள் தமக்குத் தேவையான பெற்றோலை கொள்வனவு செய்கிறனர் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ்.அலுவலக உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை பெற்றோலின் விலையைக் குறைப்பது தொடர்பான நீதி (16 ஆம் பக்கம் பார்க்க)

## சீமான், கொளத்தூர் மணி, மணியரசன் நேற்றுக் கைது; தமிழ் உணர்வாளர்கள் கண்டித்து ஆர்ப்பாட்டம்

சென்னை, டிசெ.20

புலிகளுக்கு ஆதரவாகவும் இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் பேசினர் எனக் கூறி, பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குநர் சீமான், தமிழ்த் தேசிய பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் மணியரசன் ஆகியோர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

சீமான், கொளத்தூர் மணி ஆகிய இருவரும் ஈரோட்டில் உள்ள மூன்றாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அவர்கள் கைது செய்யப்பட்டதற்கான (16 ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டியில் முன்நகர்வு முறியடிப்பு

கொழும்பு, டிசெ. 20

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முறிகண்டியில் நேற்றுப் படையினர் மேற்கொண்ட முன்நகர்வு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் படைச்சிப்பாய் ஒருவரின் சடலம் உட்பட இராணுவ தளவாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன - என்று விடுதலைப் புலிகளை மேற்கோள்காட்டி இணையத் தளங்கள் நேற்றிரவு செய்தி வெளியிட்டன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

முறிகண்டியில் இருந்து இரணைமடு நோக்கி நேற்றுக் காலை 8.45 மணியளவில் படையினர் செறிவான பல்குழல் சூட்டாதரவுடன் முன்நகர்வினை மேற்கொண்டனர். இம்முன்நகர்வு விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டது.

ஏ.கே. எல்.எம்.ஜி. - 01, ரி - 56 ரக துப்பாக்கி - 1 ஆகியவை உட்பட ஆயுதங்கள் சில புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் 2 லட்சம் மக்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிப்பு

வவுனியா, டிசெ.20

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த மூன்று தினங்களாக பெய்த கனத்த மழை நேற்று நண்பகலுடன் ஓரளவு தணிந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று மதியம் மேகம் ஓரளவு வெளிப்பாக காணப்பட்டது என கிளிநொச்சி அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மழை பெய்யாததை அடுத்து, இடம்பெயர்ந்த மக்கள் தமது அன்றாடப்பணிகளில் நேற்று ஈடுபட்டனர்.

இரண்டு மாவட்டங்களிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பாடசாலைகள், கோயில்கள் மற்றும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு சமைத்த (16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் விமானத் தாக்குதல் 6 சிறார்கள் உட்பட 11 பேர் காயம்

முல்லைத்தீவு, டிசெ. 20

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மக்கள் குடியிருப்புப் பகுதிகளை இலக்கு வைத்து நேற்றுக்காலை 9.45 மணியளவிலும், மதியம் 12 மணியளவிலும் விமானப்படையினரின் 'ஜெற்' விமானங்கள் தாக்குதல்களை நடத்தின. அதில் ஆறு சிறுவர்கள் உட்பட 11 பேர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன என்று தெரிவிக்கின்றன.

படுகாயமடைந்தவர்கள் முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் விலையை 100 ரூபாவாக குறைத்தது லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிறுவனம்

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் நேற்று நள்ளிரவு முதல் ஒரு லீற்றர் பெற்றோலின் விலையை 100 ரூபாவாகக் குறைத்துள்ளது என்று அறிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலேயே எமது நிறுவனம் பெற்றோலின் விலையைக் குறைத்துள்ளது என்று ஐ.ஓ.சி. நிறுவனத்தின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## போதியளவு பெற்றோல் கையிருப்பில்; தட்டுப்பாடு இல்லை என்கின்றது அரசு

கொழும்பு, டிச. 20

தற்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலுக்கு எந்தவித தட்டுப்பாடுகளும் இல்லை என்று ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா நேற்றுத் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலுக்கான தட்டுப்பாடு நிலவிய போதிலும் அது இப்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தற்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 160 இற்கும் மேற்பட்ட பௌசர்களில் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் விலையை உடன் குறைக்காவிட்டால் மீண்டும் நீதிமன்றம் செல்லத் தயாராகிறது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ. 20

அரசு பெற்றோல் விலையை உடன் குறைக்காவிட்டால் மீண்டும் நீதிமன்றம் செல்லப்போவதாக ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பி. ரவி கருணாநாயக்கவே இந்த (16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. ஆஸ்பத்திரி மீது ஷெல் வீச்சு ஊழியர்கள் இருவர் காயம்

வவுனியா, டிசெ.20

மணலாறில் நிலைகொண்டுள்ள படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் ஊழியர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

படையினர் நேற்றுக் காலை தொடக்கம் பிற்பகல் வரை முள்ளியவளை மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து தொடர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## போர் தொடர்ந்தும் நீடிக்கும் ஆயர்கள் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, டிசெ.20

நத்தார் தினம் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு போர் நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு இலங்கையின் ஆயர்கள் கூட்டாக விடுத்த வேண்டுகோளை அரசு நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக தேசிய பாதுகாப்பு ஊடக மைய இயக்குநர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவிக்கையில்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு

## உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் மறுப்பு

கொழும்பு, டிச. 20

பெற்றோலிய விலையைக் குறைக்குமாறு உயர் நீதிமன்றம் விடுத்த உத்தரவின் பிரதிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகலிலேயே ஜனாதிபதி செயலகம், நிதி அமைச்சு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று உயர் நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார்.

ஆனால் நேற்று முன்தினம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் முடிவுறும் வரை, எரிபொருள் விலை மாற்றம் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கொக்குவில் வளர்மதி முன்பள்ளி

### முன்பள்ளி மாணவர் அனுமதி-2009

- அமைதியான கற்றல் சூழல்
- புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு ஏற்ற கற்பித்தல்
- மாணவர் செயற்பாட்டு மண்டபம், சிறுவர் பூங்கா
- ஆற்றல்களை வெளிக்கொணரும் மேடை நிகழ்ச்சிகள்
- ஆங்கிலத்தின் முக்கியத்துவம் இணைக்கப்பட்ட கற்றல்
- தரமான ஆசிரியர்கள்
- முன்பள்ளியின்பின் தரம் - 5 வரையான ஆங்கில வகுப்புகள் (எழுத்து, பேச்சு)IEMSபரீட்சைக்குத் தயார் செய்யும் முறையில்

**ஆரம்பம்: 07.01.2009**

தங்கள் மழலைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய, தரமான ஆரம்பப் பாடசாலைகளில் அனுமதிபெற எம்முடன் இணையுங்கள். விண்ணப்பப் படிவங்களை முன்பள்ளி அலுவலகத்தில் மு.ப. 9.00-10.00 மணிவரையான நேரத்தில் பெற்றுப் பூர்த்தி செய்து 30.12.2008இற்கு முன் ஒப்படைக்கவும்.

## முன்பள்ளி ஆசிரியர் தேவை

முன்பள்ளி மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் தரமாக கற்பிக்கக் கூடிய தகுதியான ஆங்கில ஆசிரியர் தேவை.
தகுதிக்கேற்ற தரமான சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தகுதியுடையோர் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

செயலாளர், வளர்மதி நிறைவாழ்வகம்,
*சம்பியன் லேன், கொக்குவில்.* (80961)

## முதலாம் ஆண்டு நினைவுகளில்



**அமரர்
மாணிக்கம்
கந்தையா**

**தோற்றம்:
13.08.1912
மறைவு:
01.01.2008**

திதி: அபரபக்க நவமி
20.12.2008

ஆண்டொன்று சென்றாலும் ஐயா! ஆறாது எம் துயரம்
அன்பால் எமைக் காத்து ஆசையாய் வளர்த்து
ஆசையாய் அவனியில் தரமுயர வழிகள் செய்தவரே
என்றும் உங்கள் நினைவலைகள் எம் நெஞ்சோடு மோதும்.

*குமரகோட்டம்,
கோண்டாவில்.* (80938)
மனைவி, மகன்,
மருமகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
**பர்வதபர்த்தினி சிவசங்கரம்**
(ஓய்வுபெற்ற அதிபர், சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

'கோகுலம்',
சங்கத்தானை,
சாவகச்சேரி. (சி-556173)
திருமதி ந.தாமோதரம்பிள்ளை
(ஓய்வுபெற்ற அதிபர்),
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் கடமை புரியும்
அ.சண்முகராஜா அவர்களின்
அன்புத் தந்தையார்

**கந்தையா அம்பிகைபாகு**

18.12.2008 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை,
கைதடி. (80960)
பணியாளர்,
நலன்புரிச்சங்கம்.

## தர வட்டச் செயலமர்வு

வேலணை, டிசெ.20

தீவக வலயப் பாடசாலைஆசிரியர்களுக்கான தர வட்டச் செயலமர்வுகள் எதிர் வரும் திங்கட்கிழமை முதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

இரண்டு குழுக்களாக இந்தச் செயலமர்வு இடம்பெறவுள்ளது என்றும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை செயலமர்வில் கலந்துகொள்ளுமாறும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.ரி. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (1-267)

## இடம் பெயர்ந்தோருக்கான டிசெம்பர் நிவாரணம் விநியோகிக்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ. 20

இடம் பெயர்ந்த மக்களுக்கான டிசெம்பர் மாதத்திற்கான உலர் உணவுப் பொருள்கள் யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் இந்த வாரத்தில் இருந்து விநியோகிக்கப்படும் என்று சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

நாட்டரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு போன்றவை இந்த நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படும்.

அரிசி கிலோ 63 ரூபாவுக்கும், சீனி 61 ரூபா 40 சதத்திற்கும், கோதுமை மா 54 ரூபாவுக்கும், பருப்பு 185 ரூபா 50 சதத்துக்கும் நிவாரணத்திற்கு வழங்கப்படவுள்ளன.

இதே சமயம் சமுர்த்தி நிவாரணமும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (202-224)

## ATHITHEIRAN TEC

சுயதொழில் பயிற்சிக்கான
விண்ணப்பம் கோரல்

| பயிற்சிகள் | பயிற்சிகாலம் |
|---|---|
| மின்னியலாளர் | 6 மாதம் |
| மின்னியந்திரம் மீள முறுக்குநர் | 6 மாதம் |
| நீர்க்குழாய் பொருத்துநர் | 4 மாதம் |
| அலுமினியம் பொருத்துநர் | 4 மாதம் |

NAITA இனால் வழங்கப்படும் தேசிய தொழில் சான்றிதழ் பெறுவதற்கான தொழில் பயிற்சிகள். 1 வருடம், 2 1/2 வருடம்

**விண்ணப்ப முடிவுத்திகதி 31-12-2008**

பயிற்சிகள் தொடர்பான மேலும் விபரங்களை முழுமையாக தெரிந்துகொள்ள காலை 10மணி முதல் 12மணி வரையில் அலுவலகத்திற்கு சமூகமளிக்கவும்.

விண்ணப்பங்கள் அனுப்பும் முகவரி:
Director,
Athitheiran Tec, Inuvil Road, Manipay

## தவறிவிட்டது

60/4, சொல்மன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய குணம் டெமிற்றியஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (840711447V) யாழ். நகருக்கும் அச்சக வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல.37, 5 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.தொ.பே.: 2229159

## கோழிக்குஞ்சு விநியோகம்

Pirima சிகப்பு வெள்ளப் பேட்டுக் குஞ்சுகள் Bahira புறொயிலர் குஞ்சுகள் 22.12.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை
★மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★சிற்றிபாம் றேடர்ஸ், கல்வியங்காடு.
★ரவி, தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி..

## யாழ்.இந்து மகளிர் கல்லூரி

எமது கல்லூரி ஆசிரியர்களுடன் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் 2009 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டம் தொடர்பாக கலந்துரையாட இருப்பதால் 2008.12.22 திங்கட்கிழமையன்று சகல ஆசிரியர்களும் தவறாது கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

(80942) அதிபர்.

## 31 ஆம் நாள் கண்ணீர்ப் பூக்கள்



யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் உதவித் தபாலதிபராகக் கடமையாற்றி 21.11.2008 அன்று இறைவனடி சேர்ந்த

**அமரர் கந்தையா பொன்னம்பலம்**

உளம்மகிழ எம்மோடு கூடிக் கடமை செய்து உடல்விட்டு உயிர்பிரிந்து ஈசனடி சென்ற அன்னாரின் பேரிழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் துயர்பகிர்ந்து அன்பு நண்பனின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பிரதம தபாலகம். (80956) அஞ்சல் சமூகம்.

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

83, Palaly Road, Kantharmadam, Jaffna.
Phone: 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com

**LEARN FRENCH THE FRENCH WAY**

Cours de Francais - பிரஞ்சு மொழி வகுப்புகள்

பிரஞ்சுமொழி வகுப்புகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன!

தொடர்ச்சியான 100 h கற்கையின் மூலம் உள்ளகப் பரீட்சைக்கும், 200h கற்கையின் மூலம் சர்வதேச பரீட்சைக்கும் தோற்ற முடியும் (Diplome Elementaire de Langue Francaise)

அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கட்டணம், ஏனைய விவரங்களை நேரில்/ தொலைபேசியின் ஊடாக பெறலாம் . (80962)

## UNIVERSITY OF JAFFNA SRI LANKA

### MEDIA RESOURCE AND TRAINING CENTRE
### POST OF OFFICE SECRETARY (ON CONTRACT)

The Media Resource and Training Centre is a joint venture of the University of Jaffna and the Institute of Further Education (FOJO) Sweden,

Applications are invited from the suitable candidates for the post of **Office Secretary** (On Contract) in Media Resource and Training Centre (MRTC) , University of Jaffna upto 7th **January 2009**

**Qualifications and Job Description:**

Must have passed G.C.E (A/L)
- Should be able to speak English
- Must be able to handle Excel and simple accounting
- General Office duties in the Centre
- Providing support for workshops, seminars and classes
- Must maintain day to day accounting

The age limit is 18-35 years
Salary: **Rs, 11,000/-** fixed per month Selection by **test** and **interview**

**General Conditions:**

This is a full-time assignment and initially it is for a period of **one year** from the date of commencement of the assignment. However, the assignment is renewable if the services rendered and work performance during the tenure of assignment is satisfactory.

The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF) Media Resources and Training Centre will contribute the EPF and the Employees Trust Fund.

Applications for the posts shall be sent to the Senior Assistant Registrar/ Establishments. Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments, University of Jaffna, Srilanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are, requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 23x10 cm. in size.

Applications received after the closing date will be rejected without intimation

*Acting Registrar 2008.12. 18*


கிறிஸ்மஸ் முதல்
முதன் முறையாக யாழ்.மாவட்டத்தில்....
மாபெரும் பரிசுகளுடன்
விரையுங்கள்....
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அதிகூடிய பங்குலாபம்

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தினை முன்னிட்டு
**சிறிலங்கா இன்சூரன்ஸ்**
*MAK Cost Cutter Super Market*
உடன் இணைந்து நடத்தும் மாபெரும் விற்பனைத் திருவிழா
**18.12.2008 முதல் 18.01.2009 வரை**
*You are Safer with the Leader*
வருட இறுதியில் மாபெரும் சீட்டிழுப்பில் 2 மில்லியன் ரூபா வரையான பரிசில்கள்

என்றுமே இல்லாதவாறு குறைந்த கட்டுப் பணத்தில் கூடிய காப்புறுதித்தொகை
பொங்கல் வரை
உங்களின் காலவாதியான காப்புறுதிப் பத்திரங்களை புதுப்பிக்க ஓர் சந்தர்ப்பம்
(நிபந்தனைகளிற்குட்பட்டது)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# யுத்த நிறுத்த நிராகரிப்பு

'சமாதானப் பிரபு' இயேசுபிரான் அமைதியையும், சக வாழ்வையும், சமரசத்தையும் போதிக்கவே பிறப்பெடுத்தார். அவரின் பிறப்பைப் பிரதிபலிக்கும் கிறிஸ்மஸ் காலத்தில் யுத்தத்தை நிறுத்தி அமைதியையும், சமாதானத்தையும் கடைப்பிடிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டமை பொருத்தமானதே.

இது பண்டிகைக் காலம். இன்னும் ஐந்து நாள்களில் கிறிஸ்மஸ். தொடர்ந்து புது வருடப்பிறப்பு. அதன் பின்னர் தைப்பொங்கல். இவ்வாறு பண்டிகைகள் தொடரும் காலத்திலாவது உயிரிழப்புகளையும் அழிவுகளையும் தவிர்த்து அமைதி பேணுவது நாகரிகப் பண்பாகும்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம், மன்னார், அநுராதபுரம் மறை மாவட்டங்களின் கத்தோலிக்க ஆயர்களும், கொழும்பு, குருநாகல் பகுதிகளுக்கான அங்கிலிக்கன் ஆயர்களும் கூட்டறிக்கை ஒன்றை விடுத்தார்கள்.

கிறிஸ்மஸ் காலத்திலாவது யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு அவர்கள் இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் கோரினார்கள்.

நத்தார் பண்டிகையின் உணர்வை மதித்து, யுத்த நிறுத்தத்திற்கான முதல் முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்திய அவர்கள், அரசின் இந்த நடவடிக்கையை உலக நாடுகள் அரசியல் முதிர்ச்சி மற்றும் தாராளத் தன்மைக்கான அறிகுறியாகக் கருதமுடியும் என்றும் சுட்டிக்காட்டினர்.

ஆனால், அவர்களின் கோரிக்கையை எடுத்த எடுப்பிலேயே நிராகரித்துத் தனது அரசியல் முதிர்ச்சியின் அளவையும் தாராளப் போக்கின் மட்டத்தையும் நிரூபித்து விட்டது இலங்கை அரசு.

2002 இல் சர்வதேச அனுசரணையுடன் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்தம் உத்தியோகபூர்வமாக முறிக்கப்பட்ட பின்னர் இலங்கை சந்திக்கப்போகும் முதலாவது கிறிஸ்மஸ் இது.

கடந்த வருட கிறிஸ்மஸ் தினத்தை, மோசமாக வெடித்த யுத்தத்தின் சூழ்நிலையில், யுத்த நிறுத்தம் உத்தியோகபூர்வமாக முறியும் கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தபோது இலங்கை சந்தித்தது.

அந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை உத்தியோகபூர்வமாகக் கிழித்துப்போட்டு, யுத்தப் பிரகடனத்தைச் செய்தது இலங்கை அரசுதான். அந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தாங்கள் நிராகரிக்கின்றார்கள் என்று மறு தரப்பில் உள்ள விடுதலைப் புலிகள் இன்னும் அறிவிக்கவில்லை. இலங்கை அரசால் தங்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தத்தைத் தாங்கள் வேறு வழியின்றி எதிர்கொள்கின்றார்கள் என்றே புலிகள் இன்றும் - இன்னும் - கூறிவருகின்றார்கள்.

எனவே, யுத்தநிறுத்தம் ஒன்றை நத்தார் காலத்தில் ஏற்படுத்த வேண்டும் என்றால், கிறிஸ்தவ ஆயர்கள் சுட்டிக்காட்டியமை போன்று இலங்கை அரசுதான் அதற்கான முன் முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும்.

ஆனால், அவர்களின் யுத்த நிறுத்தக் கோரிக்கை வெளிவந்தகையோடே அதை நிராகரிக்கும் இலங்கைத் தரப்பின் பிரதிபலிப்பும் வந்துவிட்டது. அது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே.

தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, சிறுபான்மையினரான தமிழர்களை அடிமைப்படுத்தி ஆளவேண்டும் என்ற மேலாண்மைத் திமிரில் மிதக்கும் பௌத்த, சிங்கள ஆட்சிப்பீடம் அதனால் யுத்தவெறிகொண்டு நிற்கிறது. அத்தகைய யுத்த தீவிர நெறியில் நிற்கும் அரசுத் தலைமை, யுத்த நிறுத்தத்துக்கு இணங்க மாட்டாது என்பது எதிர்பார்க்கப்பட்டதே. ஆகவே, அரசின் பதில் குறித்து ஆச்சரியப்படுவதற்கோ, வியப்படைவதற்கோ எதுவுமில்லை.

ஆனால் -

நத்தார் காலத்தில் யுத்த நிறுத்தம் செய்து, அமைதி பேணி, கொடூர யுத்தத்தில் சிக்கித் தவிக்கும் வன்னி மக்களுக்கு அந்த சமாதானப் பிரபுவின் பூமிக்கான வருகைக் காலத்திலாவது அமைதியும், சமாதானமும் கிட்டவும், அச்சமும் அவலமும் தள்ளிப்போகவும் வாய்ப்பளிக்குமாறு கோரும் இறைஞ்சலை கத்தோலிக்கத் திருச்சபையில் ஒரு சாரார் மாத்திரம் தனித்து விடுக்கும் நிலைமையே காணப்படுவது நிச்சயம் விசனத்துக்குரியது.

உயர்வும், செழுமையும், பண்பியல்புகளும்மிக்க - அன்பையும் சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும் போற்றும் மாண்புடைய - மதங்களையும் அவற்றின் மதத் தலைவர்களையும் கூட, இன்று பேரினவாதம் தன் பிடிக்குள் ஆகர்ஷித்துக்கொண்டு விட்டதோ என்ற சந்தேகத்தை இந்த நிலைமை ஏற்படுத்தியிருக்கின்றது.

கிறிஸ்மஸ் காலத்தில் யுத்தநிறுத்தம் செய்யுங்கள் என்ற கத்தோலிக்க ஆயர்களின் கோரிக்கையில் பெரும்பாலான ஆயர்கள் கையெழுத்திடவில்லை என்ற தகவல் மனதை நெருடுகின்றது.

இப்போது மொழி ரீதியாகப் பாயும் பேரினவாதம் அதில் வெற்றிவாகை சூடியதும் அடுத்து மத ரீதியாகத் திரும்பும் - ஏற்கனவே சற்று அத்திசையில் திரும்பி விட்டது - என்ற யதார்த்தப் புறநிலையைப் பலரும் இன்னும் புரிந்துகொள்ளாமல் இருப்பது வேதனைக்குரியதே.

இனத்தின் பெயரால் - மொழியின் பெயரால் - ஏற்பட்ட விளைவுகளின் கொடூரம் போதும். தாங்க முடியாத வேதனையை அது இன்று தந்து நிற்கிறது.

இனி, மதத்தின் பெயரால் அந்தப் பிளவுகளை ஏற்படுத்தத் துணைபோகக் கூடாது, அப்படித் துணை போவது தவறு என்பது புரிகின்றது. ஆனாலும் யதார்த்தத்தை சுட்டிக் காட்டாமலும் இருக்க முடியாது என்பதால் இங்கு வடிக்கப்பட்டதே இக்கருத்து. மதப் பிளவைத் தூண்டும் எண்ணத்தில் இது முன்வைக்கப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றோம்.

# நீதிமன்றத்தினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் எழுந்தமானவையல்ல; மிகவும் நிதானமானவை

## சட்டக்கல்லூரி விழாவில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.20

நீதிமன்றத்தினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் எழுந்தமானவையல்ல. அவை மிகவும் நிதானமானதாகவே தீர்மானிக்கப்படுகின்றன என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டக்கல்லூரியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இங்கு தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

சட்டத்துடன் தொடர்புடைய சகல பிரிவுகளும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கினால் மாத்திரமே சட்டவாட்சி நீடிக்கக் கூடியதாக இருக்கும். நீதித்துறையைச் சேர்ந்த நாம் அனைவரும் சட்டத்தின் பல்வேறு நிறுவனங்களுடன் செயற்பட்டு வருகின்றோம். எந்த ஒரு நிறுவனம் சிறப்பானதாக இருக்கின்றதோ அதன் வெளிப்பாடுகளும் சிறப்பானதாகவே இருக்கும். இதனையொத்ததே சட்ட வாட்சியாகும்.

இன்றைய காலகட்டத்தில் நீதித்துறைக்கு எமது நாட்டில் பாரிய ஏற்றுக்கொள்ளல் இருக்கின்றது. பொதுவான தேவைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்துள்ளமையே இதற்குக் காரணம்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் குறுகியதும் விரிவானதுமான வகையில் சட்டத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்வாறு எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் நிதானமானவை. அதனூடான தீர்ப்புகள் எதுவும் எழுந்தமானவையாக மேற்கொள்ளப் படுவதில்லை. சிந்தித்து நிதானமான தீர்ப்புகளே வழங்கப்படுகின்றன. நீதித்துறை எடுக்கின்ற தீர்மானங் களை அல்லது உத்தரவுகளை நாட் டின் அதிக தரப்பினர் ஏற்றுக் கொள்வ தில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.



நீதித்துறையின் நடவடிக்கைகளை நாட்டு மக்கள் நோக்கிக்கொண்டே இருக்கின்றனர்.

நீதித்துறையின் தீர்மா னங்கள் தனிப்பட்டவரின் முயற்சி யில் அமைந்துவிடவில்லை. சட்டத் துறையில் அங்கம் வகிக்கின்ற சட்டத் தரணிகள், நீதிபதிகள் உள்ளிட்ட அனைவரினதும் ஒன்றிணைந்த வெளிப் பாடாகும் - என்றார்.

பொற்றோலின் விலையை நூறு ரூபாவாகக் குறைக்க வேண்டும் என்ற தீர்ப்பை உயர்நீதிமன்றம் புதன் கிழமையே வழங்கியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (50)

# 'நொதேன் பவர்' நிறுவனத்தின் மின்விநியோகம் எதிர்வரும் ஜனவரியில் ஆரம்பமாகும் சாத்தியம்

## மின்பிறப்பாக்கிகள் பழுதடைந்தமையாலேயே அதிகநேர மின்வெட்டு

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்.குடாநாட்டுக்கான 24 மணி நேர மின்விநியோகத்தை சீனநாட்டின் 'நொதேன் பவர்' நிறுவனம் எதிர்வரும் ஜனவரியில் ஆரம்பிக்கும் சாத்தியங்கள் உள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான நடவடிக்கைகளை அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் துரித கதியில் மேற்கொண்டு வருவ. தாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

குடாநாட்டுக்கான மின்விநியோகம் தொடர்பாக 'அக்றோ' நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

கடந்த சில வாரங்களாக 'அக்றோ' நிறுவனத்தின் இரண்டு மின்பிறப்பாக்கிகள் பழுதடைந்துள்ளமையால் 15 கிலோ வாட்ஸ் மின்சாரத்துக்குப் பதிலாக 12.2 கிலோவாட்ஸ் மின்சாரமே வழங்கப்படுகின்றது. அத்துடன் சுன்னாகம் மின்நிலையத்தில் உள்ள மின்சார சபையின் இரண்டு மின்பிறப்பாக்கிகளும் பழுதடைந்துள்ளன. இதனால் மின்சார சபையின் மின்பிறப்பாக்கிகள் மூலம் கிடைத்த 5 கிலோ வாட்ஸ் மின்சாரத்துக்குப் பதிலாக இப்போது 3 கிலோ வாட்ஸ் மின்சாரமே கிடைக்கின்றது. இதனால் மின்வெட்டு நேரத்தை அதிகரிக்க வேண்டிய இக்கட்டான நிலையில் மின்சாரசபை உள்ளது.

சீன நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக அதன் மின்பிறப்பாக்கிகள் கப்பல் மூலம் நேரடியாகக் காங்கேசன்துறைக்குக் கொண்டு வரப்பட்டன. பின்னர் அவை சுன்னாகம் மின்நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டுப் பொருத்தும் நடவடிக்கைகள் நடைபெற்றன. இதனையடுத்து இந்த மாதத்திலிருந்து 24 மணிநேர மின்விநியோகம் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக அந்த மின்பிறப்பாக்கிகளும் சேதமடைந்தன. அவற்றைச் சீர்செய்யும் நடவடிக்கைகளில் அந்த நிறுவனத்தின் நிபுணர்கள் குழு ஈடுபட்டுள்ளது. அநேகமாக எதிர்வரும் ஜனவரியில் அதன் மின்விநியோகம் ஆரம்பமாகும் சாத்தியங்கள் உள்ளன என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய நிறுவனத்தின் மின்விநியோகப் பணிகள் ஆரம்பமாகும் வரை முன்னர் உள்ள நிறுவனத்தின் உதவியைப் பெறுவதிலும் மின்சாரசபை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (50)

# வன்னி வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு

முல்லைத்தீவு, டிசெ.20

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளுக்கான நான்காம் காலாண்டுக்கான மருந்துப் பொருள்கள் கிடைக்கப்பெறவில்லை என மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிமனை தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கான மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு வழங்கிய போதிலும் வவுனியாவில் படையினர் இவற்றை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு எடுத்துவர அனுமதி மறுத்து வருகின்றனர்.

வவுனியா, ஓமந்தையில் தமக்கு இது தொடர்பான விவரங்கள் கிடைக்கப்பெறவில்லையென அவர்கள் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் வைத்தியசாலைகளில் முக்கிய மருந்துகள் பலவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய நாள்களாக விமானங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் தாக்குதலினால் காயமடைந்தவர்களுக்கும் மற்றும் வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள நோய்களை கட்டுப்படுத்துவதற்கும் போதிய மருந்துப் பொருள்கள் இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (50)

# படையினரின் ஷெல் வீச்சில் முள்ளியவளைத் தபாலகம் அழிவு

முல்லைத்தீவு, டிசெ.20

படையினரின் ஷெல் தாக் குதலில் முள்ளியவளைத் தபாலகம் அழிந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மணலாறில் உள்ள படையினர் கடந்த 16ஆம் திகதி நகரப்பகுதி மீது மேற்கொண்ட ஷெல்த் தாக்கு தலில் முள்ளியவளைத் தபாலகம் முற்றாக அழிந்துள்ளதுடன் அதனை அண்டிய பகுதி மக்களின் வீடுகளும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி நுழைவாசல் வளைவும் கடும் சேதங்களுக்குள்ளாகியுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, படையினர் வற்றாப்பளை மக்கள் வாழ்விடங்களை நோக்கியும் சரமாரியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். இதன் போதும் இப்பகுதியில் சில வீடுகள் சிறு சேதத்திற்குள்ளாகியுள்ளன. (50)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 06 | 21.12.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.ப. 09.36வரை |
| நட்சத்திரம்: | அத்தம் |
| | மு. ப. 09.18வரை |
| சுபநேரம்: | 09.25 - 10.55 |
| ராகுகாலம்: | 04.55 - 06.25 |

# இலங்கை முழுவதிலும் 814 பேர் காசநோயால் பாதிப்புற்றுள்ளனர்

யாழ்ப்பாணம், டிசெ.20

இலங்கை முழுவதும் உள்ள 26 மாவட்டங்களிலும் சுமார் 814 பேர் காசநோயாளர்களாகச் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

கொழும்பு காசநோய்க் கட்டுப்பாட்டு நிலையத்திற்குக் கடந்த ஒக்ரோபர் மாதம் கிடைத்த புள்ளி விவரங்களின்படி இந் நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 260 பேரும், கண்டி மாவட்டத்தில் 125 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 116 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 56 பேரும், காலி மாவட்டத்தில் 50 பேரும்,

கேகாலை மாவட்டத்தில் 39 பேரும், யாழ் மாவட்டத்தில் 32 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 25 பேரும், அநுராதபுர மாவட்டத்தில் 21 பேரும், பதுளை மாவட்டத்தில் 18 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 14 பேரும், நுவரெலியா, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் முறையே 11 பேரும்,

பொலநறுவை மாவட்டத்தில் 10 பேரும், வவுனியா மாவட்டத்தில் 08 பேரும், கல்முனை மாவட்டத்தில் 07 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 06 பேரும்,

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் முறையே இருவரும், மொனறாகலை மாவட்டத்தில் ஒருவரும் காசநோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

களுத்துறை, மாத்தளை, கிளிநொச்சி, மட்டக்களப்பு, புத்தளம், இரத்தினபுரி ஆகிய ஆறு மாவட்டங்களிலும் எவரும் காசநோயாளர்களாக இனங்காணப்படவில்லை எனவும் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன. (202-300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றுவண்டா இனக்கொலை குற்றவாளிகளுக்கு ஆயுட் காலச் சிறைத் தண்டனை விதிப்பு

டார்-எஸ்-லாம், டிச. 20

1994ஆம் ஆண்டில் இடம்பெற்ற றுவண்டா இனப் படுகொலைகள் தொடர்பான விசாரணையில் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்ட முன்னாள் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி தியோனெஸ்டி பகோ சோராவுக்கும் மற்றுமிருவருக்கும் ஆயுட்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தன்சானியாவில் இயங்கிவரும் ஐ.நாவின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இத்தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்தது. இப்படுகொலைகள் திட்டமிட்டுச் செய்யப்படவில்லை என்றும் அதனல் இனப்படுகொலைகள் அல்ல என்றும் எதிர்தரப்பு கிளப்பிய வாதத்தை இந்த நீதிமன்றம் முற்றாக நிராகரித்துவிட்டது.

முன்னாள் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி தியோனெஸ்டி ப கோசோராவும் மற்றுமிரு அதிகாரிகளும் படுகொலைகளுக்குக் காரணமான குழுவை வழிநடத்தியுள்ளார்கள். டுட்ஸி இன மக்களும், மிதவாதிகளான ஹுடுஸ் இனத்தைச் சேர்ந்தோரும் இக்குழுவின் வழிகாட்டலின் பேரிலேயே சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்ற கூற்று நீதிமன்றத்தில் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

றுவண்டா இனப் படுகொலைகளின் போது, 8,00,000இக்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். றுவண்டாவை ஒரே இன நாடாக்க வேண்டுமென்ற தங்கள் திட்டத்துக்குக் குந்தகமாக இருந்த டுட்ஸி பிரமுகர்கள் மிதவாத ஹுடுஸ் பிரமுகர்கள் ஆகியோரைக் கொண்ட விவரப் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டது. அதற்கு இம்மூவரும் பொறுப்பாளராக இருந்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டும் நீதிமன்றத்தில் உத்தரவாதப்படுத்தப்பட்டது.

முன்னாள் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி தியோனெஸ்டி பா கோசோரா, முன்னாள் இராணுவத் தளபதிகளான அனதோலி நிகியும்வா, அலோஸ் நாபாஷி ஆகிய மூவருமே குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர்.

இனப் படுகொலைகள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்காலக் குற்றச் செயல்கள் ஆகியவை தொடர்பான குற்றச்சாட்டுகளில் இம்மூவரும் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டனர். இவர்களோடு விசாரணைக்குட்படுத்தப்பட்ட இராணுவ செயற்பாடுகளுக்கான முன்னாள் தலைவர் பிரிகேடியர் கிரேட்டின் கபிலிகி நிரபராதியாகக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

இனப் படுகொலையில் பங்கெடுத்தமைக்காக பிறிதொரு விசாரணையில் வியாழக்கிழமை ஜிகிரனி ரஜோ என்னும் 57 வயதான நபருக்கு 20 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர் முன்னாள் ஜனாதிபதி ஜுவனல் ஹெபியரிமானாவின் மைத்துனராவார்.

இவர் இரு தடவைகளில் 48 ஹூடுஸ் மக்களைப் படுகொலை செய்ய உத்தரவிட்டிருந்தார் என இவர் மீதான குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

றுவண்டாவுக்கான ஐ.நாவின் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணைக்கான றுவண்டா பிரதிநிதி அலோய்ஸ் முட்ட பிங்வா இத்தீர்ப்புகள் குறித்துக் குறிப்பிடுகையில், ''நீதி கிடைத்துள்ளது. எனினும், கபிலிகி விடுதலை செய்யப்பட்டமைதான் வியப்பளிக்கிறது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## சோமாலிய கடற்கொள்ளையை முறியடிக்க சீனாவும் களத்தில்

பீஜிங், டிச. 20

சோமாலியக் கடற்பிராந்தியத்திற்கு அப்பாலுள்ள ஏடன் வளைகுடாவில் கடற்கொள்ளையர்களின் கப்பல் கடத்தல்களை முறியடிக்க சீனா முன்வந்துள்ளது. இதன் பொருட்டு, கடற்படைக் கப்பல்கள் அனுப்பி வைக்கப்படும் என அது அறிவித்துள்ளது.

கப்பல் கடத்தல்களை முறியடிக்க இரு சீன நாசகாரிக் கப்பல்களும், ஒரு விநியோகக் கப்பலும் முதற் கட்டமாக அனுப்பி வைக்கப்படும் என சீன அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

சீன எண்ணெய்க் கப்பலொன்றை புதன்கிழமை சோமாலியக் கடற்கொள்ளையர்கள் கடத்த முயன்றார்கள். எனினும், தக்க தருணத்தில் மலேஷிய கடற்படையினர் குறுக்கிட்டு கடத்தல் முயற்சியை சாதுரியமாக முறியடித்தனர். இதையடுத்து, சீனா தடுப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என ஓர் அதிகாரி கூறினார்.

''கடத்தல் முயற்சிகளை முறியடிப்பதற்காக கடற்படைக் கப்பல்கள் அனுப்பி வைக்கப்படும். இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பாக உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியான பின்னர் இதர விவரங்கள் வெளியிடப்படும்'' என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் லியு ஜியான்சோ, பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

## புஷ் மீது சப்பாத்து வீசிய நிருபரின் பிணை மனு நீதிமன்றில் நிராகரிப்பு

பக்தாத ,டிச.20

''அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ்ஷை நோக்கி தம் பாதணிகளைக் கழற்றி எறிந்த முந்டடார் அல்-ஷெய்டியில் பிணை மனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுவிட்டது'' என நீதிவான் தியா அல்-கெனானி ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''இவருக்கு எதிரான விசாரணை விசேட நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விசாரணையின் பொருட்டும், இந்நிருபரின் சொந்தப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டும் பிணை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது '' என்றும் அவர் விளக்கினார்.

''வெடிபொருள்கள் உள்ளனவா? என்பதைக் கண்டறிய முந்டடாரால் வீசப்பட்ட இரு பாதணிகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அமெரிக்க, ஈராக்கிய பாதுகாப்பு அதிகாரிகள் இப்பரிசோதனையை மேற்கொண்டார்கள். அப்போது அவை இரண்டும் நிர்மூலமாக்கப்பட்டு விட்டன'' என்றும் அவர் கூறினார்.

''சாட்சியத்துக்காக இரு பாதணிகளை பயன்படுத்த இருந்தேன். எனினும், முந்டடார் தமது செயலை ஒப்புக்கொண்டார். அத்துடன் தொலைக்காட்சிப் படங்களும் அதனை ஊர்ஜிதப்படுத்துகின்றன. அதனால், தங்குதடையின்றி விசாரணை நீடிக்கும்'' என்றும் நீதிவான் தெரிவித்துக் கொண்டார்.

''ஒரு ஜனாதிபதிக்கு எதிரான ஆக்கிரமிப்பை மேற்கொண்டார் என நிருபர் முந்டடார் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. இது ஊர்ஜிதப்படுத்தப்பட்டால், 15 வருட காலம் வரையிலான சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்படலாம்'' என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

# அதிபர் புஷ் மீது சப்பாத்து எறிந்த நிருபர் பிரதமரிடம் மன்னிப்புக் கோரினார் எனத் தெரிவிப்பு

பக்தாத், டிச. 20

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ்ஷை நோக்கி தம் பாதணிகளைக் கழற்றி எறிந்த தொலைக்காட்சி நிருபர் முந்டடார் அல்-ஷெய்டி, இச்செயலுக்காக ஈராக்கியப் பிரதமர் நூர் மாலிகியிடம் மன்னிப்புக் கோரியுள்ளார். என்று தெரிவிக்கப்பட்டது.

''முந்டடார் அல்-ஷெய்டி மன்னிப்புக் கோரி பிரதமர் நூர் மாலிகிக்குக் கடிதமொன்றை எழுதியுள்ளார். அதில் தமது 'இழிசெயலுக்காக' தாம் வருந்துகிறார் எனக் குறிப்பிட்டுள்ள அவர் அதற்காக மன்னிப்பு வழங்குமாறு கேட்டுள்ளார்'' எனப் பிரதமரின் பேச்சாளர் யாஷீன் மஜீத் தெரிவித்தார். எனினும் இக்கடிதம் குறித்து அல்- ஷெய்டியின் சகோதரர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

ஈராக்கின் தலைநகரான பக்தாத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் அமெரிக்க ஜனாதிபதியை நோக்கி, 'நாயே' என விளித்து தம் இரு பாதணிகளையும் ஒன்றன்பின் ஒன்றாக முந்டடார் அல்-ஷெய்டி எறிந்தார். அத் தருணம் புஷ் அருகில் ஈராக்கியப் பிரதமர் நூர் மாலிகி நின்றுகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாதணி வீச்சு சம்பவத்தை அடுத்து, முந்டடார் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவரின் இச்செயல் அரபுலகில் ஒரு குறிப்பிட்ட பாகங்களில் இவரை மாவீரனாக உயர்த்தியுள்ளது. எனினும், பாதணி வீச்சை ஒரு வெட்கக் கேடான காரியம் என ஈராக்கிய அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

மன்னிப்புக் கோரி முந்டடாரால் எழுதப்பட்டக் கடிதம் குறித்து பிரதமரின் பேச்சாளர் யாஷீன் மஜீத் மேலும் குறிப்பிடுகையில், ''பச்சாதாபப்படக்கூடிய அளவுக்கு அவர் வார்த்தைப் பிரயோகங்களைக் கையாண்டுள்ளார்'' என்றார்.

''நான் செய்தது மிகப்பெரிய இழிசெயல். மன்னிக்க முடியாததொன்று. 2005 ஆம் ஆண்டு கோடை காலத்தில் நிகழ்ந்த சம்பவமொன்றை இத்தருணத்தில் நான் நினைவு கூர்ந்து பார்க்கிறேன்'' என்ற பீடிகையோடு அவர் கடிதத்தை ஆரம்பித்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

''அந்தக் கோடையின்போது, மாண்புமிகு தங்களை நான் பேட்டி கண்டேன். அப்போது நீங்கள் ''உள்ளே வாருங்கள். இது உங்கள் வீடுதான். ஏன் தயக்கம்'' என மொழிந்தீர்கள். தந்தையின் பச்சாதாப உணர்வோடு என்னை மன்னிக்குமாறு நான் தங்களை வேண்டுகிறேன் என்றும் அவர் அதில் மிக விநயமாகக் கேட்டுள்ளார்''என்றும் யாஷீன் மஜீத் விளக்கினார்.

### சகோதரர் சந்தேகம் தெரிவிக்கிறார்

அதேவேளை, முந்டடாரின் இக்கடிதம் தொடர்பாக அவரின் சகோதரர்களில் ஒருவரான உடாய் அல்-ஷெய்டி சந்தேகம் தெரிவித்துள்ளார். ''இந்த தகவல் முற்றும் முழுதும் உண்மையில்லை. இது ஒரு பொய்'' என அவர் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

''முந்டடார் எனது சகோதரர். அவரைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். அவர் மன்னிப்புக் கோரக்கூடிய ஒருவர் அல்லர். அப்படி அவரால் ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்குமானால், அது இதயபூர்வமாக எழுதப்பட்டதாக இருக்கமாட்டாது. மீள முடியாத அழுத்தத்தால் எழுதப்பட்டிருக்கலாம்'' என்றும் குறிப்பிட்டார்.

உலக அரங்கில்

# குவாண்டானாமோ முகாமை மூட அமெரிக்கா துரித நடவடிக்கை

வாஷிங்டன், டிச. 20

குவாண்டானாமோ வளைகுடா தடுப்பு முகாமை மூடுவதற்கான வரைவுத் திட்டப் பணியை உடனடியாக மேற்கொள்ளுமாறு அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ரொபர்ட் கேட்ஸ் உத்தரவிட்டுள்ளார் என பென்டகன் தெரிவித்தது.

அமெரிக்க மக்களின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படாத வகையில், இதன் கைதிகள் அப்புறப்படுத்தப்படவிருக்கிறார்கள். இவர்கள் பயங்கரவாத சந்தேகத்தின்பேரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் என பெண்டகன் பேச்சாளர் ஜியோவ் மோரல் குறிப்பிட்டார்.

சர்ச்சைக்குரிய இந்த தடுப்பு முகாமில் ஏறத்தாழ 250 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை அப்புறப்படுத்துவதற்கான பணிகளை மேற்கொள்வதற்கென குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது என்றும் இப்பேச்சாளர் விளக்கினார்.

''புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒ[illegible]மா எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக பதவி ஏற்கவுள்ளார். அவர் 'பொறுப்பான வழி' முறையில் இம்முகாம் மூடப்படும் என முன்கூட்டியே அறிவித்துள்ளார். அவரது உச்ச மட்டத் திட்டங்களில் இதுவுமொன்று'' என்றும் அவர் கூறினார்.

''தற்போதைய பாதுகாப்புச் செயலர் ரொபர்ட் கேட்ஸே, ஒபாமாவின் நிர்வாகத்திலும் இதே பதவியில் நீடிப்பார். இவர் ஒபாமாவின் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்துள்ளார்'' என்றும் ஜியோவ் மோரல் விளக்கினார்.

''இந்த முகாமை எப்படி மூடலாம்? மூடுவதற்கு தேவையானவை எவை? எவ்வாறு கைதிகளை அப்புறப்படுத்தலாம்? அதேவேளை, அபாயகரமான பயங்கரவாதிகளிடமிருந்து அமெரிக்க மக்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் யாவை?ஆகிய கேள்விகளுக்கான யோசனைகளை முன்வைக்குமாறு, புதிய நடவடிக்கைக் குழுவை, ரொபர்ட் கேட்ஸ் கேட்டுள்ளார்'' என்றும் அவர் தெரிவித்தார்.

# தேர்தல் ஏற்பாடுகள் மும்முரம் பங்களாதேஷில் பாதுகாப்பு தீவிரம்

டாக்கா, டிச. 20

''இஸ்லாமிய தீவிரவாதிகள் தேர்தல்களை குழப்பியடிக்க முனையலாம். அதனால் எதிர்வரும் தேர்தல்களையொட்டி பங்களாதேஷ் எங்கும் வியாழக்கிழமை முதல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது'' எனக் குறிப்பிட்டுள்ள பங்களாதேஷ் தேர்தல் ஆணையாளர் ஜெகாவாத் ஹுஸைன் ''35 ஆயிரம் வாக்குச்சாவடிகள் திறக்கப்படும். பாதுகாப்புக் கடமையில் 3 இலட்சம் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்படுவர்'' என்றும் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் இராணுவத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் இடைக்கால அரசு எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத்தேர்தல்களையொட்டி, முன்கூட்டியே அவசரகால நிலை அமுலாக்கத்தை நீக்கியுள்ளது.

கடந்த இரு வருடகால இந்த அமுலாக்கத்தை நீக்குவதற்கான உத்தரவில் இவ்வார ஆரம்பத்தில், ஜனாதிபதி இயாஜுதீன் அஹ்மத் கைச்சாத்திட்டிருந்தார். இதற்கிணங்க புதன்கிழமை அமுலாக்கம் நீக்கப்பட்டது.

பொதுத் தேர்தல்களுக்கு முன்னரே அவசர கால தடைவிதிப்புகள் நீக்கப்படவேண்டுமென பங்களாதேஷின் இரு பெரும் அரசியல் கட்சிகளான முன்னாள் பிரதமர் காலிதா ஷியாவின் பங்களாதேஷ் தேசியக் கட்சியும், முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக்கும் கோரிக்கை விடுத்து வந்துள்ளன.


இவ்விரு பெண்களும் முன்னாள் பிரதமர்களாவர். இருவர் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இவ்விருவரும் தத்தம் கட்சியும் பொதுத் தேர்தல்களில் பங்கெடுக்கும் என அரசுக்கு அளித்துள்ள உத்தரவாதத்தை அடுத்து, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

தேர்தல் சட்ட மறுசீரமைப்பை வலியுறுத்தி தலைநகரான டாக்காவிலும், இதர நகரங்களிலும் பரவலாக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணிகள், வன்முறைகள் ஆகியவற்றைத் தடுக்கும் பொருட்டு பங்களாதேஷில் 2007 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அவசரகால நிலை அமுல்படுத்தப்பட்டு வந்தது.

அமுலாக்க நீக்கம் குறித்து திங்கட்கிழமை மாலை பொலிஸ் மாஅதிபர் நூர் மொஹமது, எவ்.பி.என். செய்திச் சேவைக்குக் குறிப்பிடுகையில், ''செவ்வாய்க்கிழமை நள்ளிரவு ஒரு நிமிடம் கடந்ததும் இந்த அமுலாக்கம் நீடிக்க மாட்டாது'' என்றார்.

1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் சுதந்திரமடைந்தது. இதன் 37 ஆவது வருட நிறைவு தின நிகழ்வு செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது. இராணுவ பிரதம தளகர்த்தா ஜெனரல் மோயீன் யு அஹ்மத் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்றினார்.

அவர் தம் உரையில், ''ஐ.நா. கோட்பாடுகளுக்கு இணங்க, பெரும் சமாதானப் பங்களிப்பிலேயே பங்களாதேஷ் இராணுவம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. அரசியல் பாத்திரத்தை வ[illegible] மில்லை; மு[illegible]'' என்றார்.



பிரிட்டனில் ஒலிம்பியா கண்காட்சி நடைபெற்று வருகிறது. அந்நாட்டின் மன்னர் சாள்ஸின் மனைவி பமிலா லண்டனில் உள்ள குதிரைக் கண்காட்சியை சுற்றிப் பார்த்தார். [illegible] அங்குள்ள குதிரை ஒன்று ஒய்யாரமாக சிரித்தது. பிறகு நடந்த விழாவில் வெற்றி பெற்ற குதிரைகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தெல்லிப்பழை சுகாதாரப் பிரிவின்

# வைத்திய நிறுவனங்கள் சிலவற்றின் கிணறுகள் வெள்ளத்தால் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வைத்திய நிறுவனங்கள் சிலவற்றில் உள்ள கிணறுகள் மாசடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளம் இக்கிணறுகளுக்குள் புகுந்தமையே இதற்குக் காரணம்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய சாலை, அளவெட்டி பிரதேச வைத்திய சாலை, புன்னாலைக்கட்டுவன் ஆரம்ப வைத்திய பராமரிப்பு நிலையம், உடுவில் ஆரம்ப வைத்திய பராமரிப்பு நிலையம், சுன்னாகம் ஆரம்ப வைத்திய பராமரிப்பு நிலையம் ஆகியவைகளில் உள்ள கிணறுகள் துப்புரவு செய்யவேண்டிய நிலையில் உள்ளன என தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

(202-300)

## தொழிற் பயிற்சிக் கண்காணிப்புப் பிரிவு யாழ்.மாவட்டத்தில் ஆரம்பம்

கந்தர்மடம், டிசெ.20

குடாநாட்டில் நடத்தப்படும் தொழிற்பயிற்சிகளைக் கண்காணிக்கவும், அதன் மூலம் அவற்றை மேம்பாடடையச் செய்யும் நோக்கிலும் தொழிற்பயிற்சிக் கண்காணிப்புப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவு கடந்த புதன்கிழமை யாழ். அரச அதிபர் கே.கணேஷால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தப்பிரிவுக்கு வலுவூட்டல் உபகரணங்களை கனேடிய உலகப்பல்கலைக்கழகசேவை நிறுவனம் வழங்கியுள்ளது. (202-77)

## தொழில்திறன் பயிற்சிக்கு 25 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.20

வேலணை பிரதேச மட்டத்தில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழில் திறன் சான்றிதழ் பயிற்சிக்கு 25 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஜனவரிமாத முதல் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிகின்றன. (202-111)

## சாட்டிப் பகுதியில் புதிய குடிதண்ணீர்க் கிணறு

யாழ்ப்பாணம், டிசெ.20

வேலணைப் பிரதேச மக்களின் குடிதண்ணீர் சேவையை சீரமைக்கும் பொருட்டு சாட்டிப் பகுதியில் புதிய கிணறு ஒன்று வெட்டப்படவுள்ளது.

புதிய நன்னீர்க் கிணறு அமைப்பதற்கென 9லட்சத்து 50 ஆயிரம் ரூபா மாகாண சபையால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வேலணை பிரதேசசபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தெரிவித்தார். (202-111)

## யோகாசன வகுப்புகள்

கந்தர்மடம், டிசெ.20

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவச யோகாசன வகுப்புகள் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.(202)

## அத்துளுத் திட்டத்தில் இணைப்புப் பெற விரும்புவோர் கவனத்துக்கு

கரவெட்டி, டிசெ.20

அத்துளுத் திட்ட குடிதண்ணீர் விநியோகத்திலிருந்து தனியாக இணைப்புப் பெற விரும்புவோர் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை கிராம அலுவலரின் வழிப்படுத்தலுடன் தயாரித்து சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (202-70)

# நத்தார், புதுவருடப் பண்டிகையை ஒட்டி ப.நோ.கூ.சங்கக் கிளைகள் நாளை திறக்கும்

யாழ்ப்பாணம், டிசெ.20

நத்தார் மற்றும் புதுவருட பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாண் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளும் நாளை ஞாயிற்றுக்கிழமை முழு நாளும் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன எனச் சங்கத் தலைவர் ப.கிரிதரன் அறிவித்துள்ளார்.

அத்துடன் யாழ்.பிரதான வீதியில் உள்ள கூட்டுறவு நகர் விற்பனை நிலையம் நத்தார், புதுவருட பண்டிகையை முன்னிட்டு இரவு 7.30 மணி வரை திறந்து வியாபார நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. (202-224)

# வாழ்வாதார உதவித் திட்டங்களுக்கு இளவாலை, பிரான்பற்று கிராமங்கள் தெரிவு

பண்டத்தரிப்பு, டிசெ.20

இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தின் வாழ்வாதார உதவித் திட்டத்திற்கென பிரான்பற்று, இளவாலைக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பிரான்பற்றில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எண்ணெய் உற்பத்தி, தையல், சிற்றுண்டி தயாரித்தல் போன்ற திட்டங்களும்-

இளவாலையில் காளான்கள் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளன.

சமுர்த்தி செயலணி மூலம் இத்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபி வரதலிங்கம் தெரிவித்தார்.

# யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ரவிராஜனுக்கு 'இளம்விஞ்ஞானி' விருது

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி புண்ணியமூர்த்தி ரவிராஜனுக்கு 'இளம் விஞ்ஞானி' விருது கிடைத்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விஞ்ஞான தொழில்நுட்ப தேசிய விருதுகள் வழங்கும் நிகழ்வில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண இந்தப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

பௌதிகவியல் துறையில் இவர் மேற்கொண்ட விஞ்ஞான ஆய்வுகளுக்கும், இவரின் புகழ்பெற்ற விஞ்ஞான ஆய்வுக் கட்டுரைகளுக்காகவும் தேசிய விஞ்ஞான மன்றமும் நெதர்லாந்து எல்ஸ்வியர் பதிப்பகமும் இணைந்து இவரை இவ்விருதிற்காகத் தேர்ந்தெடுத்தன.

இவர் 2006 இல்,உபவேந்தர்களும், இயக்குநர்களும் கொண்ட சபையினரால் 'பௌதிக விஞ்ஞானத்திற்கான அதி சிறந்த இளவிஞ்ஞான ஆய்வாளர்' என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



விருது வழங்கும் நிகழ்வின் போது...

இவர் தமது ஆரம்பக் கல்வியை மாதகல் புனித தோமஸ் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் பெற்றுள்ளார். இவர் தனது விஞ்ஞானமாணி, முதுமாணி, கலாநிதிப் பட்டங்களை முறையே யாழ்., பெரதெனியா, இலண்டன் பல்கலைக் கழகங்களில் பெற்றார்.

(202)

# பொறியியல் சேவை அலுவலர்களுக்கு வாய்மொழிப்பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.20

இலங்கைப் பொறியியல் சேவைச் சபை அலு வலர்களுக்கான தமிழ் மற்றும் சிங்கள வாய்மொழிப் பரீட்சை (முதலாம் வினைதிறன்காண் தடைப்பரீட்சை) நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு உள்நாட்டலுவல்கள் அமைச்சில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்காத தகைமையுடைய உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தை தேசிய அடையாள அட்டை இலக்க விவரம் உட்பட, சுயமாகத் தயாரித்து திணைக்களத் தலைவரூடாக முன்னளித்து வாய்மொழிப் பரீட்சைக்கு கொழும்பு உள்நாட்டலுவல்கள் அமைச்சில் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்க நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாணப் பொது நிர்வாக செயலகம் திணைக்களத்தலைவர்களைக் கோரியுள்ளது.

(202-300)




## வரணிமுகாமுக்கு முன்பாக உள்ள வீதி தற்காலிகமாகத் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

வரணி முகாமுக்கு முன்பாக உள்ள வீதி நேற்று வெள்ளிக்கிழமை வாகனங்கள் செல்வதற்குத் தற்காலிகமாகத் திறந்து விடப்பட்டுள்ளது.

மணல் வீதி சீர்செய்யப்படும் வரை சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் மட்டும் வீதியைப் பயன்படுத்த முடியுமெனவும் சைக்கிள்கள் மணல் வீதி வழியாகவே போக்குவரத்துச் செய்ய வேண்டுமென வும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மணல் வீதியில் உள்ள பாரிய குழிகளால் பஸ் சேவை நடத்துவது நிறுத்தப்படலாமென 'உதயனில்' செய்தி வெளியாகியதையடுத்து முகாமுக்கு முன்பாக உள்ள வீதி திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-207)

# கரவெட்டி போதனாசிரியர் பிரிவின் சிறந்த விவசாயிகள் கௌரவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிசெ.20

கரவெட்டி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் சிறந்த விவசாயிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் விவசாயப் போதனாசிரியர் வை.ஞானபாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்து கொண்டார்.

கௌரவிப்புப் பெற்ற விவசாயிகளின் விவரம் வருமாறு:

**சிறந்த குரக்கன் செய்கையாளர்**

தம்பையா கனகராசா (நெல்லியடி கிழக்கு), சி.சீவரத்தினம் (வல்வெட்டி), ஆறுமுகம் கிருஸ்ணமூர்த்தி (கரணவாய் மேற்கு), ஆ.தேவதாஸ் (கரணவாய் மேற்கு).

**சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்**

கதிர்காமத்தம்பி குணநாதன் (அத்தாய்), கந்தசாமி சண்முகநாதன் (அத்தாய்), சிவசம்பு சிவானந்தராசா (அத்தாய்).

**தலைமைத்துவம் தாங்கும் சிறந்த பெண் விவசாயி**

ஸ்ரீஸ்கந்தராசா சின்னம்மா (கரணவாய் கிழக்கு), ஸ்ரீகாந் ஸ்ரீதர்சினி (உடுப்பிட்டி மத்தி), வீரகத்திப்பிள்ளை மங்களேஸ்வரி (கரணவாய் வடக்கு).

**சிறந்த சேதனப்பண்ணையாளர்**

சின்னத்தம்பி சிவயோகநாதன் (கரணவாய் கிழக்கு), நடராசா சரவணகுகா (வல்வெட்டி), முருகேசு கணபதிப்பிள்ளை (கரணவாய் கிழக்கு).

**சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்**

சுப்பையா சிதம்பரப்பிள்ளை (கரணவாய் வடக்கு), கந்தசாமி காந்தரூபன் (நெல்லியடி), கந்தப்பு சர்வேஸ்வரதேவன் (கரணவாய் கிழக்கு).

**சிறந்த சோளச்செய்கையாளர்**


திரவியநாயகம் தவக்குமார் (கரணவாய் வடக்கு), திருநாவுக்கரசு குகக்குமாரன் (கரணவாய் வடக்கு), ச.விமலநாதன் (கரணவாய் வடக்கு).

**நெல் உற்பத்தியில் உயர் விளைவு பெற்ற விவசாயி**

க.தர்மலிங்கம (கரணவாய்), க.ஆலால சுந்தரம் (கப்பூது), நாராயணபிள்ளை நாகராசா (அத்தாய்).

**சிறந்த சுயவிதைநெல் உற்பத்தியாளர்**

வெள்ளைக்குட்டி துரைராசா (கரணவாய் தெற்கு), சித்திரவடிவேல் தவராஜ் (கரணவாய் தெற்கு), கந்தையா நவரத்தினம் (கப்பூது). (202)





கோப்பாய் தனிப்பனை ஸ்ரீ வீரபத்திரசுவாமி ஆலயப் பெரும் திருவிழாவுக்கு என அமைக்கப்பட்டு வரும் புதிய சித்திரத் தேரின் பவளக் கால் நாட்டும் வைபத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

பவளக் கால் நாட்டப்படுவதை முதலாவது படத்திலும் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திகரக் குருக்கள், சிற்பாச்சாரியார் விஸ்வப் பிரமஸ்ரீ பாலச்சந்திரன் மற்றும் உதவிக் குருமார், ஆலய நிர்வாகத்தினர் ஆகியோரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை



எங்கள் குடும்பத் தலைவர்

**காசிலிங்கம் இந்திரதேவன்**

(பேபி)

மலர்வு: 22.08.1948

மறைவு: 20.11.2008

அறுபது ஆண்டுகள் இப்பூவுலகில் வாழ்ந்தீர்
அளப்பெரும் சேவைகள் செய்தீர்
சமய தத்துவங்கள், நடைமுறைகள் அறிந்தீர்
உற்றார், உறவினர், நண்பர்களுடன் அன்பாய் பழகினீர்
எழுது வினைஞராய் உழைத்தீர்
இறுதிவரை குடும்ப வாழ்க்கையை இன்பமாக கழித்தீர்
நோய் நொடிகளை தாங்கி தங்கள் நம்பிக்கையுடன் இரண்டறக் கலந்தீர்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 20.11.2008 அன்று இறைபதமடைந்த எமது குடும்பக் குல விளக்கின் 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை இன்று (20.12.2008) சனிக்கிழமை மு.ப.11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோவிலாக்கண்டி, கைதடி. (80940) குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் இதய அஞ்சலி



**திருமதி பர்பதவர்த்தனி சிவசங்கரம்**

(முன்னாள் அதிபர், யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

கடந்த 20.11.2008 வியாழக்கிழமை இறைபதமடைந்த யா/ சாவச்சேரி மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி பர்பதவர்த்தனி சிவசங்கரம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி. (80946)

# 47 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

**ஆறுமுகம் சண்முகராசா**

மண்ணிற்கு: 11.01.1951

விண்ணிற்கு: 04.11.2008

கண்ணீரில் கழிந்தன நாள்கள் நாற்பத்தி ஏழு
தந்தையே மரணித்தது உங்கள் உடல் மட்டுமே....
மரணிக்கவில்லை உங்கள் நினைவுகள் அவை எம்மோடே....

04.11.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு ஆறுமுகம் சண்முகராசா அவர்களின் மரணச் செய்தி கேட்டு வந்து ஏற்ற உதவிகள் செய்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி, தொலைநகல், மின் அஞ்சல், தந்தி மற்றும் SMS மூலம் துக்கம் விசாரித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (20.12.2008) சனிக்கிழமை கொடிகாமத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமகள்.

படத்தடி வீதி, கொடிகாமம். (80920)

# தவறிவிட்டது

வேலுப்பிள்ளை யோகேஸ்வரன் என்பவரது மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், காப்புறுதி, லைசென்ஸ் என்பன யாழ்.கல்வி வலயத்திற்கும், நல்லூர் பிரதேசசபைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். மத்திய கல்லூரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P 0602216568

# பிற்போடப்பட்டுள்ளது

யாழ்.பிரதேச செயலக நலன்புரிச்சங்க வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

மேற்படி அதிர்ஷ்டலாபச் சீட்டிற்கான அதிர்ஷ்டம்பார்க்கப்படும் திகதி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. தைப்பொங்கல் தினமான 14.01.2009 (புதன்கிழமை) அன்று மு.ப 10 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

செயலாளர், நலன்புரிச்சங்கம், யாழ்.பிரதேச செயலகம்.

(80949)

# விற்பனைக்கு

நல்ல இன தென்னங்கன்று, ஒட்டு மாங்கன்றுகள், ஒட்டுத்தேசி, யம்பு, மாதுளை, பலா, கொய்யா, தேக்கங்கன்று, சவுக்கு, சமண்டலை, அசோகா கன்று, மலைவேம்பு, இந்தியன் முருங்கை, றெட்லேடி பப்பா ஆகியன உடன் விற்பனைக்குண்டு. தொகையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (பூங்கன்றுகளும் விற்பனைக்குண்டு)

தொடர்பு: நிரூலங்கா பாம், K.K.S.வீதி, இணுவில். கிளை: பலாலி வீதி, ஊரெழு. பிள்ளையார் கோயில் அருகில் (80948)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் வீதி அமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் விடுதிகளை இணைக்கும் வீதி அமைக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தினால் இந்த வீதி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவிலிருந்து ஆண்கள் விடுதி, பிரசவ விடுதி, ஆகியவற்றுக்குச் செல்லும் பாதை மணலாக இருப்பதால் மழை, வெயில், காலங்களில் நோயாளர்கள் சிரம்ங்களை எதிர்நோக்குவதாக 'உதயனில்' சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதிய வீதி அமைக்கப்பட்டதையடுத்து பிரதான வாசல் ஊடாக வாகனங்கள் செல்லக்கூடியதாக உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(202- 207)

# சாவகச்சேரியில் கிணறுகள் இறைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வெள்ளம் உட்சென்ற கிணறுகள் அந்தந்தப் பிரிவு சனசமூக நிலையங்கள் ஊடாக இறைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

கிணறுகள் இறைக்க விரும்புவோர் தமது பிரிவு சனசமூக நிலையத்தினருடன் நகரசபை அலுவலகத்திற்கு வருகை தருமாறு நகரசபை செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

(202-207)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

**கந்தையா பொன்னம்பலம்**

(உதவித் தபாலதிபர், யாழ்ப்பாணம்)

உதயம்: 02.01.1955

மறைவு: 21.11.2008

கெற்பேலியைச் சேர்ந்த கந்தையா பொன்னம்பலம் அவர்களின் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கெற்பேலி மேற்கு, மிருசுவில். குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சின்னர் முருகேசு**

பிறப்பு: 12.12.1924

இறப்பு: 17.12.2007

திதி. 20.12.2008


நீங்கள் எம்மை விட்டுச் சென்ற நாள்களை
கண்ணீருடன் எண்ணிப் பார்க்கின்றோம்
கடவுளிடம் பிரார்த்திக்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக.

இல. 60/ 1,
ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# நீங்கா நினைவுடன் ஈராண்டில்...





ஆண்டவன் படைப்பு: 26.02.1961

அநியாய அழிப்பு: 12.01.2007

அமரர்

**வெள்ளையன் பிரேமச்சந்திரன்**

(கிராம அலுவலர், J/383, தொண்டைமானாறு தெற்கு)

திதி 20.12.2008

எம் இனிய அப்பாவே! உங்கள் தங்க முகமெங்கே?
சிம்மக் குரலெங்கே? திக் கெங்கும் தேடுகின்றோம்
திசையெங்கும் பார்க்கின்றோம்
வஞ்சகரின் வஞ்சக வலையிலே
வீழ்ந்து மாண்டனையோ
உங்களுடன் கூடிவாழும் பொற்காலம்
இந்தப் பூமியிலே இன்னொரு முறை எங்களுக்கு வாராதோ?

'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ இம் மானிலத்தில்'

நிரந்தர முகவரி: அரசடி, தொண்டைமானாறு,
தற்காலிக முகவரி: நீதிமன்ற வீதி, மல்லாகம்

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.


# நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு...

யாழ். நகரில் இருந்து புலம் பெயர்வாழ் உங்கள் உறவுகளுக்கு வேண்டிய ஆவணங்கள், பொதிகள் என்பன மிகக் குறைந்த கட்டணத்தில் உலகில் எந்த நாட்டிற்கும் பாதுகாப்பாகவும் விரைவாகவும் அனுப்பிவைக்கப்படும்.

வாடிக்கையாளர் நலன் கருதி
3 கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் 1கிலோ ரூபா 750 வீதம்
கனடாவிற்கு 1 கிலோ ரூபா 850 வீதம்

கொழும்பில்:
மாருதி ஏஜன்ட்
NO. 1, வெலஸ்ட் பிளேஸ்,
கொழும்பு - 6

தொடர்புக்கு:
ஏசியன் தளபாட நிலையம்
133, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் அருகில்) யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடுகள்....!

தம்பிராசா மாமாவுக்கு இப்போது வயதாகிவிட்டது. அறுபத்தெட்டு வயதைத் தாண்டிய வயோதிபராக அவரைக் காணுகையில் அவரது வாலிப வயதுக்கோலம் ஞாபகம் வரும். சிரித்த முகத்தோடு கலகலப்பாய்ப் பேசும் அவரை எங்கள் எல்லோருக்கும் பிடிக்கும். அவரைப் பிடித்திருந்தத்தற்கு மிக முக்கிய காரணமொன்றுண்டு. திரைப்படம் பார்ப்பதற்கு திரையரங்குகளுக்குச் சென்ற - அறுபதுகள் எழுபதுகளின் - காலங்களில் சிறுவர்களாக இருந்தவர்களைப் படம் பார்க்க அழைத்துச் செல்பவர் தம்பிராசா மாமாதான். குழந்தைத்தனம் மிகுந்த ஆர்வத்தோடு "இண்டைக்குக் குடியிருந்த கோயிலுக்குப் போவமே ராசா?..." என்று ரகசியக் குரலில் அவர் கேட்டது இன்று போலிருக்கிறது.

போவதாக முடிவாகிவிட்டால் அவசர அவசரமாகத் தன் அலுவல்களை ஒன்றரை மணிக்கு முன் முடித்துவிட்டு - எங்கே போகிறோம் என்பதைக் குறிப்பாக எங்களின் அம்மப்பாவுக்குத் தெரியவராத விதத்தில் ஏதாவது ஒரு சாட்டுச் சொல்லிவிட்டு மெல்ல வந்துவிடுவார் மாமா. நீண்டநேரம் மாமாவைக் காணாவிட்டால் அம்மப்பா ஒருவிதமாக ஊகித்துவிடுவார். "உவன் வசுக்கோப்புக்குத்தான் போயிற்றான். எனக்குத் தெரியும். அந்தர அவசரமாய் வேலையை முடிக்கேக்குள்ளை எனக்கு ஒரு சமுசயம் வந்தது... வரட்டுக்கும் இண்டைக்கு". அந்தக் காலத்தில் சினமாவை 'பயஸ்கோப்' என்று குறிப்பிடுவார்கள். எங்களது அம்மப்பாவுக்கு அது வசுக்கோப்புத்தான். மாமா ஒரு எம்.ஜியார் பக்தன். புதுப்படம் என்றால் வேளைக்கே போய் கியூவில் நின்று, நெரிந்து, நசுங்கி, ரிக்கற் வாங்குவது பெரிய சாதனை அவருக்கு. "நீ யோசியாதையடியப்பு ரிக்கற் கட்டாயம் எடுப்பம். நானெல்லோ வெண்டு தருவன்" என்று எங்களுக்குத் தென்பூட்டுவார் மாமா. வாழ்வின் சுமைகள் புரியாத, யுத்தம், குண்டுவீச்சு, அகதி வாழ்க்கை இப்படியான சொற்களே புழங்காத அந்தக்காலத்தில் வாழ்க்கை மிக லேசாய் இருந்தது. சின்னச் சின்ன மகிழ்ச்சிகளைச் சிரமத்தோடு தேடியடைகின்ற ஒரு சந்தோஷம் இருந்தது.

இப்போது சினமா வீட்டுக்குள் வந்துவிட்டது. ரி.வியும், டெக்கும், சி.டி.பிளேயரும் சர்வசாதாரணமாகிவிட்டன. மாமா வீட்டில்கூட எல்லாம் இருக்கிறது. தற்காலப் படங்கள் பற்றி மாமாவிடம் அபிப்பிராயம் கேட்டால், ''பரவாயில்லையடியப்பு! எண்டாலும் எங்கட வாத்தியாரின்ர படங்கள் மாதிரி வராது.



ந.சத்தியபாலன்

நேற்று இதயக்கனி போட்டான். உண்மையில சோக்காத்தான் இருக்குது...

என்னதான் இருந்தாலும் கியூவில நிண்டு அடிபட்டு ரிக்கற் எடுத்து, ரோச் வெளிச்சத்தில் தடவி, சீற் பார்த்து, இருந்து, விசிலடித்துப் படம் பாக்கிற சந்தோசம் வீட்டுக்குள்ள வருமேராசா?''

மனக்கண் முன் அழகாய் விரிந்து தெரிகிறது அந்தநாள் அழகு. (இன்னும் சுவடுகள் பதியும்)

# வார வசந்தம்

## யாருமே காணாத ஒரு துளி கண்ணீர்

எப்படித்தான் வகுப்பறையைக் கட்டுப்பாடாக வைத்திருக்க முயன்றாலும், சில மாணவர்கள் எம்மிடம் விலகியே போய் விடுகின்றனர். அப்படியான மாணவர்களை எம்மிடம் இணைத்துக்கொள்ள பல உத்திகளைக் கையாண்டாலும் அவை சாத்தியப்படாமல் போய்விடுகின்றன.

ஒரு நாள் ஒரு மாணவனிடம் "படிக்காமல் என்ன செய்யப்போகிறாய். இந்தக்காலம் படிக்காமல் ஒரு தொழில் கிடைக்காது " என்றேன். "சேர் ரெயிலரிங் செய்யப்போறன். மாமான்ரை கடையிருக்கு" இன்னொரு நாள் இதுபோல இன்னொரு மாணவனிடம் உரையாடும்போது , "சேர் எனக்கு வயறிங் வேலை கொஞ்சம் தெரியும். அண்ணையோடை சேர்ந்து இன்னும் பழகுவன்". அவனது தமையன் ஊரில் பிரபல்யமான வயறிங் வேலைக்காரன். இவை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

ஏட்டுக்கல்வி மீதான நம்பிக்கையினமா? மூன்று லட்சம் பேர் O/L எடுத்து அதில் ஒரு லட்சம் பேர் A/L படித்து 20 ஆயிரம் பேரை பல்கலைக்கழகம் செல்ல வைப்பதுடன் பள்ளிக்கல்வி அல்லது ஏட்டுக்கல்வி தன்னுடைய பணியை நிறைவு செய்து விடுகின்றது.

நான் ஆரம்ப வகுப்புப் படித்த பள்ளியில் செல்லம்மா ரீச்சர் என்று ஓர் அருமையான ரீச்சர் படிப் பித்தார். அவர் கைவேலைகளில் மிகவும் வல் லவர். கதிரை பின்ன, பெட்டி இழைக்க, பாய் இழைக்க, நீத்துப் பெட்டி இழைக்கவும், துணிகளில் பூ வேலை போடவும் அருமையாகச் சொல்லிக் கொடுப்பார். அவரிடம் பழகிய பின் எனது சகோதரன் எங்கள் வீட்டுக் கதிரையைத் தானே பின்னுவான். செல்லம்மா ரீச்சர் சொல்லிக் கொடுத்த பயனுள்ள வேலைகளால் பயன் பெற்ற மாணவர்கள் பலர். எனக்கு தெரியக் கடகம் இழைத்துவிற்ற மாணவர்கள் பலர். அவர் பாயிற்கு சாய ஓலை போடவும் காட்டிக் கொடுத்தவர். இங்கு நான் சொல்ல வருவது எமது கல்வியில், தொழில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக் கப்பட வேண்டியதன் அவசியம், ஆகும். எல்லோரும் வைத்தியராகவும், இஞ்சினியராகவும் படித்து வரமுடியாது என்பதை எப்போதே உணர்ந்து விட்டோம். பின்னர் ஏன் மாற்றம் ஒன்றை உருவாக்காமல் விட்டிருக்கின்றோம் என்று புரியவில்லை. 9 ஆம் வகுப் புடன் மாணவர்களை தரம் பிரித்து தொழிற் கல்விக்கு அனுப்புவதால் ஓர் எதிர்கால சந்ததி எதிர்கால நிச்சயமற்ற தன்மையை எதிர்நோக்காது நல்ல வாழ்வைப் பெறமுடியும்.

என்னுடைய பள்ளியில் படித்த சிவகுமார் என்ற மாணவனை பஸ்ஸில் ஒருநாள் சந்தித்தேன்.

"இப்ப என்னப்பு செய்றீ"

'ஒண்டுமில்லை சேர்'

A\L எல்லா படிச்சனீ?

"ஓம் சேர் 2B, C வந்தது"

"கொலிசுக்கும் காணாதா?"

"நான் கொமஸ்தானே சேர் படிச்சனான்"

"CIMA செய்ய றை பண்ணுமன்"


"அவ்வளவு வசதி இல்லை சேர்"

அதற்கு மேல் என்னால் எதுவும் கதைக்க முடியவில்லை. அவன் ஒரு சமையல்காரரின் மகன் என்பது எனக்குத் தெரியும். அவரைத் தமது வீட்டு விசேஷங்களுக்கு சமைக்க வைப்பதற்கு சனம் முண்டியடிப்பதுண்டு. அவருடன் சிவகுமாரும் சிலவேளைகளில் துணைக்குப் போவான். அதனால் இவனுக்கும் நன்றாகச் சமைக்கத் தெரிந்திருக்கும். மேலை நாடுகளிலெல்லாம் சமையலுக்கென சிறப்பான கற்கைநெறிகளும், சமூக அந்தஸ்தும் நிறையவே உண்டு. இனியாவது இவை பற்றி நாம் நிறைய யோசிப்பது அவசியமாகும்.

************************

# ஓவியக் கலையின் சிறப்பும் அதன் வளர்ச்சியும்

(சென்றவாரத் தொடர்ச்சி)



பொலனறுவைக் காலத்தைத் தொடர்ந்து கண்டிக் காலத்து ஓவியங்கள் பிரபல்யம் பெற்றன. இந்த ஓவியங்கள் பிறிதொரு புதிய பாணியில் இருபரிமாணம் கொண்டு எழுச்சி பெற்றன. இக்காலத்து ஓவியங்களை தெகல்தொறுவ, தம்புள்ள ரிதிவிகாரை, முல்கிரிகல போன்ற இடங்களில் இன்றும் காணமுடிகின்றது.

தற்காலமாகிய கொழும்புநகர்க் காலத்தில் ஓவியக்கலை உச்சக்கட்ட வளர்ச்சியை அடைந்தது என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை. இக்காலத்தில் நவீன பாணி ஓவியங்கள் பெரும்பாலும் வரையப்பட்டது. இவ்வகையில் களனி விகாரை, கோஷமி விகாரை, திருநீற்றி தேவாலயம் போன்ற இடத்து ஓவியங்கள் சிறந்து விளங்குகின்றன.

இலங்கையில் ஓவியத்துறையில் புகழ்பூத்த சிறந்த ஓவியர்களாக ஜோர்ச்கீற், சோளியஸ்மெண்டிஸ், M.சார்லிஸ், டேவிட்பெயின்ரர், ரிச்சட்கவ்ரியேல், தரணியாகல J.D.A. பெரேரோ, ஸ்ரான்லிஅபேசிங்க, அமரசேகர முதலியார் போன்ற ஓவியர்களைக் குறிப்பிடலாம். இந்த ஓவியர்கள் யாவரும் ஓவியக் கலையை வளர்த்ததுடன் எதிர்கால சந்ததியினருக்கு வழி அமைத்தும் கொடுத்தனர்.

இலங்கையில் இன்று பல மாவட்டங்களில் ஓவியக்கலை சிறப்புற்று விளங்குகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் ஓவியக்கலையானது நிலத்தில் வேரூன்றிய ஆலமரம்போல் தன் சிறப்புக்களை விழுதுகளாகப் பரப்பி உள்ளது. நல்லூர்க் கந்தசுவாமி கோயில், வெங்கடேஸ்வரர் ஆலயம், பல்கலைக்கழகம், பாடசாலைகள் போன்ற இடங்களில் உள்ள ஓவியங்கள் சான்றாக விளங்குகின்றன.

பாடசாலைகளில் ஓவியக் கலையானது ஓர் பாடமாக விளங்குவதுடன் க.பொ.த சாதாரணதரம் உயர்தரம் போன்றவற்றிலும் இடம்பிடித்து பல்கலைக்கழகத்திலும் தனியொரு கலைப்பிரிவாக இவ் ஓவியக்கலை விளங்குகின்றது. மேலும் கழகங்கள் நிறுவனங்கள் என்பன பலவிதமான ஓவியப் போட்டிகளையும், கண்காட்சிகளையும் நடாத்தி ஓவிய வல்லுனர்களை இன்றும் உருவாக்கிக்கொண்டு வருகின்றன.

இவ்வாறு ஆதிமனிதர்களால் உருவாக்கி புத்துயிரிப்புடன் வளர்க்கப்பட்ட ஓவியக்கலை அன்றும், இன்றும், என்றும் கலையுலகில் அழியாத ஒளிமங்காத சூரியனைப்போல் பிரகாசிக்கும். *(முற்றும்)*

**கோ.தர்ஷிகா, யாழ்ப்பாணம்.**

# சரசாலைக் காட்டில் ஒரு பறவைகள் சரணாலயம்!

-அருணன்-



*(சென்றவாரத் தொடர்ச்சி..)*

பற்றைகளில் தொங்கும் தூக்கணாங்குருவிக் கூடுகள் எண்ணிலடங்காதவை. கொக்குகள், நாரைகள், சிறியரகக் குருவிகள், காகங்கள் எனப் பல விதமான குருவிகள் தங்கியுள்ளன. இவை அந்தப் பகுதியில் நீர் நிலைகளில் வாழ்கின்ற உயிரிகளைப் பிடித்துத் தமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

**வெளிநாட்டுப் பறவைகள் வருகை**

பறவைகள் காலத்துக்குக் காலம் பருவநிலை மாற்றங்களின்போது தேசம் விட்டுத் தேசம் நோக்கியும், கண்டம் விட்டுக் கண்டம் நோக்கியும் இடம் பெயர்ந்து செல்வதுண்டு. இப்பறவைகள் கால சீதோஷ்ண நிலைக்கு ஏற்பவே இடம் பெயருகின்றன. குறிப்பாக ஆயிரம் இரண்டாயிரம் கிலோ மீற்றர் தூரங்களுக்கு அப்பால் உள்ள இடங்களில் வாழ்கின்ற பறவைகள் கூடத் தங்கள் நாடுகளில் கால மாற்றத்தால் உணவுப் பற்றாக்குறை ஏற்படும்போது கூட்டம் கூட்டமாக இடம் பெயர்வதுண்டு. பின்னர் காலநிலை சீரடைந்தவுடன் அந்தப் பறவைகள் தங்கள் இடங்களுக்கு திரும்பிச் செல்வது வழமை. அவ்வாறு திரும்பிச் செல்லும் திறமை, மதிநுட்பம் என்பனவெல்லாம் அவற்றுக்கு உண்டு என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பருவகாலங்களில் இடம் பெயர்ந்து வரும் அழகிய பறவைகள் கூட்டமாக வந்து தென்மராட்சிப் பகுதியில் உள்ள கும்பி குளம் சரசாலைக் காட்டுப் பகுதியில் சில காலங்கள் தங்கி வாழ்கின்றன. இப்பறவைகள் இக்காட்டுப் பகுதியில் இரவுப் பொழுதைக் கழிக்கும். பகல் பொழுதில் வேறு பகுதிகளுக்குச் சென்று உணவைத் தேடிவிட்டு மாலை வேளைகளில் மீளவும் இக்காட்டுப் பகுதிக்கு கூட்டம் கூட்டமாக வந்து தங்குகின்றன. கால மாற்றத்தால் வரும் வெளிநாட்டுப் பறவைகளுடன் நம் நாட்டில் வழமையாகவே வாழ்கின்ற பறவைகளும் நாளாந்தம் இப்பகுதியில் தங்கியுள்ளன. இவற்றுள் காகங்கள், நீர்க்காகங்கள், கொக்குகள் என்பனவே அதிகம். மாலை வேளைகளில் இப்பகுதியில் பறவைகளின் சத்தம், அவற்றின் அசைவுகள், வரிசை வரிசையான அவற்றின் பறப்பு முயற்சிகள் என்பனவெல்லாம் மனதுக்கு ரம்மியமாக இருக்கும்.

ஏறக்குறைய ஒரு பறவைகள் சரணாலயம் போல சரசாலைக் காடு நாளாந்தம் காட்சி தருகின்றது. இயற்கை மீதும், பறவைகள் மீதும் அக்கறை கொண்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்தால் சரசாலைக் காட்டினை ஒரு பாதுகாக்கப்பட்ட பறவைகள் சரணாலயமாக மாற்ற முடியும். அவ்வாறு நிகழ்ந்தால் யாழ். குடாநாட்டின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகச் சரசாலைக் காட்டுப்பகுதி மிளிரக் கூடிய வாய்ப்புகள் உண்டாகும். *(நிறைவு)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்

10 • 01 • 1966



விண்ணில்

01 • 01 • 2008

## அமரர் திரு. தியாகராசா மகேஸ்வரன்

**(முன்னாள் இந்துசமய விவகார அமைச்சர், யாழ் மாவட்ட மற்றும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)**

அன்பு சொரியும் அப்பா ஆனந்தம்
அளிக்கும் அப்பா இன்பம்
தரும் அப்பா எங்கள் இனிய
அப்பா பொன் பொருள் போகம்
எல்லார்க்கும் வழங்கும் அப்பா எங்களை
அற்றைத் திங்கள் அம்மார்கழி நாளில்
திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் நடராசரை
தரிசிக்க அழைத்துச் சென்றாரே ஐயனார்
வெள்ளோட்டம் பார்த்து அடுத்தநாள் பஞ்சரதம்
இழுத்து அதிகாலை ஆருத்திரா தரிசனம்
கண்ணாரக் கண்டு தூது தீர்த்தம்
தீபம் தரிசித்து ஐயனார் புராணம்
வெளியீடும் கண்டு அன்னதானம் அன்பாய்
செய்து காரைநகர் மக்கள் ஆனந்தக்
கூத்தனை தரிசிக்க வந்த அயலூர் மக்கள்
அனைவருடனும் அன்புடன் கலந்து ஆனந்தமாய்
வீடு திரும்பினோமே! இற்றைத் திங்கள்
இம்மார்கழி நாளில் எங்கள் அருமை அப்பாவை
எங்கள் ஆசை அப்பாவை காணாது திகைக்கின்றோம்
திக்குத்தெரியாது திசைமாறி நிற்கின்றோம்
பாதை தெரியாது பரிதவித்து நிற்கின்றோம்
தலைவன் இல்லாது தனித்து நிற்கின்றோம்
பன்னிரண்டு மாதம் பரிதவித்து நிற்கின்றோம்
அப்பா உங்களைப்பார்க்க விருப்பமப்பா
அப்பா உங்களை காண விருப்பமப்பா
நேச அப்பா உங்கள் நினைவால்
நெஞ்சம் புண்ணாகி நினைவு இழக்கின்றோம்
இற்றைத்திங்கள் இம்மார்கழி வந்ததப்பா
ஈழத்து சிதம்பரம் செல்வது இல்லையோ
பஞ்சதேர் வடம் இழுப்பது இல்லையோ
பன்னீர்,பூக்கள், திரவியங்கள் எங்கேயப்பா
அன்னதானம் அன்புடன் போடுவது இல்லையோ
ஆருத்திரா தரிசனம் தீர்த்தம் தூது தரிசனம் இல்லையோ
அப்பா அப்பா தாரா அழைக்கின்றேன்
அன்பாக விடை தாரும் அப்பா
ஆனந்தக்கூத்தனிடம் தனியாகச்செல்வீரோ
ஆனந்த நடனம் அழகாய் காண்பீரோ
பொன்னம்பல வாணர் தரிசனம் பெற்றீரே
பிறவி ஒழிந்து பேரின்பம் பெறுக அப்பா
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஈழத்துச்சிதம்பர தரிசனம் செல்வதில்லையா?

**பவதாரணீ மகேஸ்வரன்.**

தங்கமான எங்கள் ஆசை அப்பா
கம்பீரமாய் சிவனைக் கும்பிடச் சென்றீரே
கும்பிட்டு வரும்போது கூற்றுவன் கொடிய
துவக்கால் சுட்டனனே! சின்னக் குழந்தைகளென
சிந்திக்காது பச்சைக்குழந்தைகளிடத்து பரிதாபமில்லாது
பிஞ்சுக் குழந்தைகள் பேதலித்து நிற்க
சின்ன வயதிலேயே அப்பாவைச் சாகடித்தனரே!
கொடிது! கொடிது! அப்பா இந்தக் கொடுமை
அன்று முதலாக அப்பாவைக் காணவில்லை
அன்பான பேச்சை நாங்கள் கேட்கவில்லை
கொஞ்சி மகிழவில்லை கூடிச்செல்லவில்லை
பெற்று வளர்த்த அப்பா பெயரிட்ட அப்பா
வளர்த்த அருமை அப்பா வரிசையிட்ட
நேச அப்பா தொடர்ந்து பேணி வளர்க்காது
பெரியவர் ஆக்காது பெருமை பார்க்காது
ஐந்து வயதிலேயே அகன்ற மர்மம் என்ன?
சின்ன வயதிலேயே சென்ற மர்மம் என்ன?
பிஞ்சு வயதிலேயே பிரிந்த மர்மம் என்ன?
இச்செயல் கொடிது! கொடிது! அப்பா
அதனிலும் கொடிது! அப்பா இன்று
பச்சைப் பாலகனாய் பக்குவமாய் உமைநினைத்து
பன்னிரண்டு மாதங்கள் முட்டுக்கால் குந்தி
அறுகெடுத்துப் பூசை செய்யும் அர்ச்சுனனாய்
வில்வம் எடுத்துப் பூசை செய்யும் விசயனாய்
பூ எடுத்து பூசை செய்யும் புண்ணியனாய்
அறுசுவை உண்டி அன்பாய் படைத்து
பத்துவித பட்சணங்கள் பாங்காய் படைத்து
எள்ளும் தண்ணீரும் கடலில் இறைத்து
என்னப்பா பூசனையால் உங்களை ஈசனாக்கி
இதயம் நெக்குருக இப்பணிகள் தொடர்வதென்ன?
நீங்கள் அள்ளி அணைத்து அன்புசொரியும்
பிரணவன் பாடுகிறேன் பேசாது இருப்பதென்ன?
கோளாறு இருப்பது என்ன? வாராது இருப்பது என்ன?
கொடிது! கொடிது! அப்பா நேச அப்பா
பித்தன் சிவனுடன் பேதமறக் கலந்தீரோ
அன்பன் சிவன் பேரருளில் அழகாய் கலந்தீரே.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அப்பா பூசனையால் ஈசனாக்கி போற்றுகின்றேன்

**பிரணவன் மகேஸ்வரன்.**

பிராமணத்தி பிராமணத்தி என்று பேரன்பு
சொரியும் எங்களைப் பெற்ற அப்பா
பக்குவமாய் பல இடங்கள் கூட்டிச்செல்லும் அப்பா
பாலூட்டி சோறூட்டி பண்டங்கள் தந்து
மார்பிலும் தோளிலும் சீராட்டி மகிழ்வூட்டும் அப்பா
கொஞ்சிக்குலாவிக் கூடிமகிழும் அப்பா
அப்பாவைக் காணாமல் பவித்திரா அழுகின்றேன்
பெற்றவரை காணாது புலம்புகின்றேன் அப்பா
பச்சைக்குழந்தைகளை பசுமையாய் வளர்க்காது
சின்னக் குழந்தைகளைச் செல்லமாய் வளர்க்காது
பட்டம் பெறும்போது பக்கம் இருக்காது
ஈழத்துச் சிதம்பரத்திற்கு எங்களைக் கூட்டிச்செல்லாது
கண்ணீர் துடைக்காது கவலை ஆற்றாது
சொற்ப வயதிலே சென்ற இடம் எங்கே?
சிவனாரைச் சேவித்துச் செல்வங்களை மறந்தீரோ?
ஆனந்தக்கூத்தனோடு அன்பாய் கலந்திடுவீர்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அப்பாவைக்காணாமல் அழுகின்றேன்.

**பவித்திரா மகேஸ்வரன்.**

*அமரர் தி. மகேஸ்வரனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை 21ஆம் திகதி காலை 9.30 மணிக்கு காரைநகர் ஈழத்து சிதம்பர அறப்பணி நிலைய மண்டபத்தில் பஜனை, நினைவுப்பேருரை நூல் வெளியீடு என்பன இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுக்கு அனைவரையும் அன்புடன் அழைப்பதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**திருமதி. விஜயகலா மகேஸ்வரன்,**
**குழந்தைகள், குடும்பத்தினர்.**

**276, பலாலி வீதி, கந்தர் மடம்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட லயன் டாக்டர் வை.தியாகராஜாவுக்கு சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் மாலை அணிவிக்கிறார்.



கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் பாடசாலை சாரணர் அணியுடன் எடுத்துக் கொண்ட படம். அருகில் பாடசாலை அதிபர் க.இ.இராசசேகரம் தம்பதிகள் உட்பட பாடசாலைச் சமூகத்தினரும் காணப்படுகின்றனர்.



சமூக அபிவிருத்தி மன்றத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட தையல் கண்காட்சியின் போது எடுக்கப்பட்ட படம். நிகழ்வின் பிரதம விருந்தினரான கோப்பாய் பிரதேச செயலர் சி. ஏ. மோகன்ராஸும் மன்றத் தலைவி ஜெபமணி யோசேப்பும் கண்காட்சியைப் பார்வையிடுகின்றனர். (202)





சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் ஒருவருக்கு கியூடெக்-கரிதாஸ் அமைப்பினால் வழங்கப்பட்ட மீன்பிடி உபகரணத்தை, யாழ்.மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் ரி.தர்மலிங்கம் கையளிப்பதைக் காணலாம். சங்கத் தலைவர் க.குலசிங்கமும் காணப்படுகிறார். (படம்: மு.சந்திரகுமார்)



ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் செ.சிவநடராசாவின் மணிவிழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வின் விருந்தினர்களான வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமார், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோர் வரவேற்கப்படுவதையும் காணலாம்.



குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தின் 50 ஆவது வருட கலைப் பொன்விழா நிறைவு நிகழ்வின்போது இடம்பெற்ற கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் ''அண்ணாவியார்'' கி.கிறிஸ்தோபரை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் க.கணேஷ் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.
(படம்: குருநகர் செய்தியாளர்)





வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் போஷாக்கற்ற சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கும் சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் திட்டம் பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் ஆரம்ப விழாவிலே பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் உரையாற்றுவதையும் விழாத் தலைவர் பி.ஆனந்தநடேசன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீ[illegible] ஆகியோர் [illegible]ருப்பதையும் காணலாம். (218)



உள்ளூரில் இடம்பெயர்ந்தோரின் புனர்வாழ்வுக்கான வடபிராந்தியத் தலைவரும் சர்வதேச லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்தவருமான லயன் க.சிவபாலனின் ஏற்பாட்டில் அண்மையில் வவுனியா பொது வைத்தியசாலைக் கண் சிகிச்சைப் பிரிவினர் இலவச பரிசோதனை முகாமை அண்மையில் நடத்தினர். அதன்போது 24 பார்வைக் [illegible]ளோருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

லயன் சிவபாலன் பயனாளி ஒருவருக்கு கண்ணாடி வழங்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Assembly of God-Chunnakam
(One Vision One Purpose)
## 23rd Church Anniversary Service
(1985-2008......)
"Glory Be To God"

* Praise and worship Service will be held on the 21st Sunday morning (21.12.2008) At 9.00 am in AOG Chunnakam
* Followed by special Healing - Service for the sick and other needs of people.
* All are welcome and receive God's best richest blessings

**"Jesus Heals, Saves and Protects even today and leads you into Eternity forever"**

"You have nothing to do but to save souls"
- John Wesley



Servants of Team Ministry

## அசெம்பிளி ஒவ் கோட் - சுன்னாகம்
(ஒரு தரிசனம் ஒரே நோக்கம்) (1985-2008.........)
23ஆவது சபையின் வருடாந்த விஷேட ஸ்தோத்திர ஆராதனை
"கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக"

* 21ஆம் திகதி ஞாயிறு காலை 9.00 மணிக்கு AOG சபையில் வருடாந்த ஆராதனை நடைபெறும். (21.12.2008)
* இதைத் தொடர்ந்து விஷேட சுகமளிக்கும் ஆராதனை
* அனைவரும் வந்து ஆண்டவர் இயேசுவின் ஆறுதலையும் சுகத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

"இன்றும் ஆண்டவர் இயேசு உன்னை குணமாக்கிறார், இரட்சிக்கிறார், பாதுகாக்கிறார், நித்தியத்திற்குள் வழிநடத்துகிறார்"

"நீ செய்வதற்கான வேலை ஒன்றுமில்லை ஆனால் ஒன்றுண்டு அதுவே அழியும் மக்களை மீட்டுக்கொள்வது மட்டுமே"
- ஜோண் வெஸ்லி.

(80944)

## இணுவில் பொது நூலக சனசமூக நிலைய முன்பள்ளிக் கலைவிழா

இணுவில் பொதுநூலக சனசமூக நிலைய முன்பள்ளி மாண பர்களின் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பொதுநூலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வே.சந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலனும் சிறப்பு விருந்தினராக முன் பள்ளி இணைப்பாளர் திருமதி புஸ்பராணி லோகேஸ்வரனும் கலந்துகொள்வர். (202)

## அரியாலைப் பிரதேச விவசாயிகளுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.20

அரியாலைப் பிரதேசத்தில் இவ் வருடம் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

அரியாலை சிவில் அலுவலகத்தில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இராணுவ அதிகாரி இச்சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளார்.

விவசாயிகள், தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற சகல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட செய்கையாளரைக் கலந்து கொள்ளுமாறு அரியாலை விவசாய சம்மேளனத்தினர் கேட்டுள்ளனர். (202)

## அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்



**தாமோதரம்பிள்ளை சிவராசா**
அவர்கள்
25 வருடங்கள் இலங்கை வங்கியில் சேவையாற்றி ஓய்வுபெற்று தனது அறுபதாவது வயதில் காலடி பதிக்கும் இந்நாளில் அவர் மேன்மேலும் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

பொன்னாலை. (80921)

**கோபால் குடும்பத்தினர்.**

# COMPUTER EXPRESS
Institute of Information Technology
167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250, 0777222422

**ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்**

*Diploma in Hardware Engineering*
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

*Diploma in Video Editing*
முன்னணி Video Mixing Software களூடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

*Diploma in Graphic Designing*
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

*Diploma in Computerized Accounting*
Course Fee : 3500/=

வகுப்புக்கள் ஆரம்பம் : 22/12/2008 09.00AM

## தேசிய அயர்லாந்து பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அகவொளி ஆற்றுப்படுத்தல் நிறுவனத்தின்
# இரண்டாவது பட்டமளிப்பு விழா



பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்



ஜேம்ஸ் பிறவுண்
வேந்தர், அயர்லாந்து தேசிய பல்கலைக் கழகம்



அருட்பணி எஸ்.ஜே.இராசநாயகம்
இயக்குநர், அகவொளி

**இன்றைய நாளில் பட்டம் பெறுவோர்**

**2006- 2007 அணியினர்**



Sr.மேரி ஜெசி, Sr.மேரி மில்றெட், Sr.மேரி கிளாரா, Sr.மேரிஜெயசீலி, Sr.அன்ரோனியா, Sr.மேரிமார்கிறெட், Ms.சு.கலிஸ்ரா, Ms.ஏ.ராதிகா, Ms.S.சர்மிலி, Ms.A.யாழினி



Mr.K.ஏ.றூபன், Mr.K.சசிகுமார், Mr.T.சயந்தன், Ms.R.ரஞ்னலஜி, Ms.Y.சுவேந்திரா, Ms.P.பிரியந்தி, Mr.P.சுரேஸ்குமார், Ms.K.உதயகுமாரி, Ms.P.புஸ்பலதா, Mr.S.மயூரன்

**2007- 2008 அணியினர்**



Mr.ஏ.பிரேமகுமார், Mr.S.ஜீவதுளசி, Sr.A.ஜக்குலின், Sr.F.வசந்தி, Sr.A.அனிற்றா, Ms.S.காயத்திரி, Mr.T.காலநாதன், Mr.G.சபேசன், Ms.S.பவளமதி, Ms.M.அருந்தினி



Ms.F.மன்றிசா, Mr.M.இதயராஜ், Mr.V.கஜானனன், Mr.A.சுபாஸ்கரன், Mr.K.[illegible], Ms.J.ஜோதி, Ms.V.[illegible], Mr.S.சதீஸ், Mr.Y.மயூரன், Ms.P.உசாந்தினி, Mr.S.ராஜேந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி இப்போது அரச படைகளுக்கு மரண முற்றுகை அங்கிருந்து விடுதலைப் புலிகள் முன்னரே வெளியேறிவிட்டனர்

## இந்திய 'றோ'வின் முன்னாள் செயலர் கூறுகின்றார்

சென்னை, டிசெ. 20

போரை எதிர்பார்த்து பல வாரங்களுக்கு முன்னரே புலிகள் கிளிநொச்சி அலுவலகங்களை விட்டு வெளியேறி விட்டனர்.



கிளிநொச்சியில் இப்போது எதுவுமில்லை. ஆனால் சிறீலங்காப் படையினருக்கு மரண முற்றுகைக் களமாக அது உள்ளது.

இப்படி இந்திய 'றோ'வின் முன்னாள் செயலாளர் பி.இராமன் கூறியுள்ளார்.

கிளிநொச்சி சமர்க்களம் தொடர்பாக அவர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கிளிநொச்சி சமர்க்களம் சிறிலங்கா படைத்தரப்புத் தெரிவித்துள்ள தகவல்களை விட புலிகள் தெரிவித்திருக்கும் தகவல்கள் உண்மையாக இருப்பதாகத் தெரிகிறது.

புத்தாண்டுக்கு முன்னர் கிளிநொச்சியைக் கைப்பற்றுவோம் என்ற படைத் தளபதி பொன்சேகாவின் உறுதிமொழியை நம்பி புதிதாகப் படையணிகளில் சேர்க்கப்பட்ட சிங்கள இளைஞர்கள் மரணத்தை முத்தமிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

### ஆர்தரின் உறுதிமொழி

1940 களில் நடைபெற்ற கொரிய போரிலும் கூட இதேபோன்றதொரு உறுதியை ஜெனரல் டக்ளஸ் மாக் ஆர்தர் கூறியிருந்தார். தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்கப் படைகள் போரில் வடகொரியா மற்றும் சீனப் படைகளுக்கு எதிராக போரிட்டு வந்தன.

அப்போது "நத்தார் நாளுக்கு முன்னதாக போரை முடித்து வீடுகளுக்குத் திரும்புவோம்." என்று மாக் ஆர்தர் உறுதிமொழி அளித்திருந்தார்.

"நத்தார் நாள்" வந்தது.... சென்றது... ஆனால் வடகொரியர்களும் சீனர்களும் மிகக் கடுமையாகப் போராடினர்.

மீண்டும் மாக் ஆர்தர் அதேபோன்ற உறுதிமொழியைத் தர "எந்த ஆண்டு நத்தார் நாளில் வீட்டுக்குத் திரும்புவது?" என்ற விரக்தியான கேள்வி எழுந்தது. அந்த போர்க் களத்தில் இரு தரப்பிலும் ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்தானர்.

இந்த வாரத்தின் தொடக்கத்தில் கிளிநொச்சி புறநகர்ப் பகுதிகளில் கடுமையான மோதல் நடைபெற்று வருகின்றன.

சிறிலங்கா படைத்தரப்புக்கும் புலிகளுக்கும் குறிப்பிடத்தக்க இழப்புகள் ஏற்பட்டுள்ளன. போர்க்களங்களில் ஒவ்வொரு தரப்பும் இழப்புக்களை குறைத்துக் கூறுவது உண்டுதான். ஆனால் சிறிலங்கா படைத்தரப்பு வெளிப்படுத்துவதைவிட புலிகள் கூறுவது உண்மைக்கு நெருக்கமானதாகவுள்ளது.

சிறிலங்கா படைத்தரப்பினர்170 பேரை கொன்றுவிட்டதாக புலிகள் தெரிவித்திருந்தனர். படைத்தரப்போ 25 பேரை மட்டுமே இழந்திருந்தாக கூறியது.

ஆனால் விடுதலைப் புலிகளோ கொல்லப்பட்ட 36 படையினரின் படங்களை வெளியிட்டு மேலதிக இழப்புக்களை படைத்தரப்புக்கு ஏற்படுத்தியதை நிரூபித்திருக்கின்றனர்.

இருதரப்பிலும் கடுமையான போர் நடந்து பலர் உயிரிழந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை விட சிறிலங்கா தரப்பு பெரும் எண்ணிக்கையிலான படையப் பொருள்களை இழந்திருக்கின்றன. புலிகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் அந்த படையப் பொருள்கள் அவர்களின் கைகளுக்குச் சென்றுள்ளது.

பாரிய ஓர் இலக்குடன் நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்களாக புலிகள் போர்க்களத்தில் நின்றனர். சிறிலங்கா படைத்தரப்பினரிடமிருந்து படையப் பொருள்களை அவர்கள் கைப்பற்றினாலும் ஆயுதப் பற்றாக் குறை உள்ளது.

சிறிலங்கா படையினரின் வான் தாக்குதலுக்கு பதிலடியான வான் தாக்குதல்களை புலிகள் நடத்தவில்லை.

சீனா மற்றும் ஈரான் நிதியுதவியுடன் ஆயுதங்களை சிறிலங்கா பெரும் எண்ணிக்கையில் குவித்தது. ஆனால் புலிகளை ஒப்பிடுகையில் படையினர் நன்கு பயிற்றுவிக்கப்படவில்லை.

போரை எதிர்பார்த்து பல வாரங்களுக்கு முன்னரே புலிகள் கிளிநொச்சி அலுவலகங்களை விட்டு வெளியேறிவிட்டனர். கிளிநொச்சியில் இப்போது எதுவும் இல்லை. ஆனால் சிறிலங்கா படையினருக்கு மரண முற்றுகைக் களமாக அது உள்ளது. எது மரண முற்றுகைக் களம் என்பது புலிகளுக்கு தெரியும். சிறிலங்கா படைத்தரப்புக்குத் தெரியாது. இதுவே புலிகளுக்கு சாதகமானதாக உள்ளது- என்றுள்ளது. (202)

# சிமெந்தின் விலை 75 ரூபாவால் குறைப்பு

கொழும்பு,டிசெ.20

கட்டட மூலப்பொருள் கூட்டுத்தாபனம் சிமெந்தின் விலையை மூடையொன்றுக்கு 75 ரூபாவால் குறைத்துள்ளது.

ஊடகவியலாளர் மாநாடொன்றில் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

அரச வர்த்தக கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம், சிமெந்துக் கூட்டுத்தாபனம், இலங்கை சிமெந்து நிறுவனம் ஆகிய அரச நிறுவனங்களின் சிமெந்துகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 75 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. (202)

# கோப்பாய் விவசாயிகளுக்கும் வெள்ளத்தால் பெரும் பயிரழிவு

கோப்பாய்,டிசெ.20

கோப்பாய் மத்தி, வடக்கு பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போது பெரும் பயிரழிவு ஏற்பட்டுள்ளதாக கோப். மத்தி, வடக்கு விவசாய சம்மேளத்தி தெரிவித்துள்ளனர்.

விவசாயிகளுக்கு ஏற்பட்ட அழிவுகள் பதிவிற்குட்பட்டிருப்பதாகவும் இதுவரை பதிவினை மேற்கொள்ளாதோர் உடனடியாக பதிவினை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளனர். (202-72)

# தமிழ் எழுத்துகளின் தாய் 'அ' வா? ஆயுத எழுத்தா? மொழி அறிஞர்களிடம் வினவுகிறது கல்வியமைச்சு

கொழும்பு, டிசெ. 20

தமிழ்ப் பாடநூல்களின் முன் அட்டையின் பின்பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும் தமிழ் எழுத்து அட்டவணையில் ஆயுத(ஃ) எழுத்தே தமிழின் முதன்மை எழுத்தாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளமைக்கு கல்வியியலாளர்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வருகின்றமையைக் கருத்தில் கொண்டு -

அது சரியாக முன்னிலைப்படுத்தப்படும் பட்சத்தில்,மரபு ரீதியாகப் பின்பற்றப்பட்டுவரும் இந்த மொழி வழக்கில் எதிர்வரும் காலங்களில் திருத்தங்களை மேற்கொள்ள இணங்கியுள்ள கல்வியமைச்சு, அதற்காக தமிழ் அறிஞர்களினதும், பேராசிரியர்களினதும் ஆக்கபூர்வமான கருத்துகளையும் அபிப்பிராயங்களையும் கோரியுள் ளது.

இதுதொடர்பாக கல்வியமைச்சு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிப்பவை வருமாறு:-

தமிழ் எழுத்துகளின் அட்டவணையானது தமிழ்ப்பாட நூல்கள் ஒவ்வொன்றினதும் முன் அட்டையின் பின் பக்கத்தில் கட்டமிடப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. இது பெரிதும் வரவேற்கப்படவேண்டியதொன்று. எழுத்துகள் யாவும் "அ" வில் தான் ஆரம்பிக்கும். அது தமிழ் மொழியிலிருந்தாலும் சரி சிங்கள மொழியாகவிருந்தாலும் சரி பொதுவானது. 'அகர முதல எழுத்து' என்றே உலகப் பொதுமறை வள்ளுவம் முதல் அனைத்தும் குறிப்பிடு கின்றது.

இது இவ்வாறிருக்க குறிப்பிட்ட பாடப்புத்தகங்களின் அட்டவணையில் ஆயுத எழுத்து(ஃ) முதலில் இடம்பெற்றிருக்கின்றது. இது மாணவர்களுக்கு தவறான அல்லது பொருத்தமில்லாத எண்ணக்கருவை ஏற்படுத்திவிடும்.

இத் தவறு பாடநூல்களில் நீண்ட காலமாகத் தொடர்ந்து வந்துள்ளபோதிலும் அது கட்டாயமாகத் திருத்தப்படவேண்டும்.

இது தொடர்பாக பிரதிக்கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் ஆற்றுகையுடன், யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதியும் கல்வி அமைச்சின் நிபுணத்துவ ஆலோசகருமான முனைவர் திருநாவுக்கரசு கமலநாதனின் ஏற்பாட்டில் தமிழ் மொழி மூலப் பாடநூல்களின் தரமேம்பாடு, விதந்துரைப்பு, திருத்தங்கள் தொடர்பான இரு செயலமர்வுகள் யாழ். கல்வி வலயத்திலும், கொழும்பிலும் நடத்தப்பட்டு ஆய்வறிக்கைகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டன.

இவ்வறிக்கையின் விதந்துரைப்புக் கமைய, தமிழ் எழுத்துகளின் அட்டவணையானது "அ" வில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப் பட வேண்டும் - எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என். ஜே.புஸ்பகுமார மற்றும் கல்வி வெளி யீட்டுத் திணைக்களத்தின் தமிழ்ப்பிரிவு உதவி ஆணையாளர் லெனின் மதிவாணம் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில்-

பாடநூல்களில் அச்சிடப்பட்டிருக்கின்ற தமிழ் எழுத்துகளின் அட்டவணையானது இதுவரை காலம் தமிழ் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அட்டவணையெனவும், அந்தவகையில் கல்வி வெளியீட்டுத் திணைக்களமும் இந்த மரபைப் பின்பற்றி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளதோடு தமிழ் எழுத்துகளின் அட்டவணை தொடர்பான ஆய்வொன்றையும் மேற்கொண்டு, அது உரிய அறிஞர்களால் உறுதிப்படுத்தப்படுமாயின் தேவைப்படும் மாற்றத்தினை எம்மால் பின்பற்றக்கூடியதாக இருக்கும் - எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பலதரப்பட்ட முத்தமிழ் அறிஞர்களைக் கொண்டுள்ள எமது தமிழ்த்தேசியத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தமிழ் அட்டவணை தொடர்பான உண்மையான நிலையை அறிய பல அறிஞர்களைக் கொண்ட குழு இது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றது. கூடிய விரைவில்/தமிழ் எழுத்து அட்டவணையின் மெய்த்தன்மை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்ப டுகின்றது.

எனினும் இதற்காக அனைத்து அறிஞர்களினதும் பேராசிரியர்களினதும் கருத்துகளும் அபிப்பிராயங்களையும் விதந்துரைப்புகளும் எதிர்பார்க்கப்படுகின்றன - என்று உள்ளது. (சி)

# தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் இரண்டாம் மொழியாகச் சிங்களம்

பட்டிருப்பு, டிச. 20

தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் கல்வி பயிலும் 8 ஆம் தர மாணவர்களுக்கு இரண்டாவது மொழியாக சிங்கள மொழி யைப் போதிப்பதற்கான நடவடிக்கை களை - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக் களம் மேற்கொண்டுள்ளது.

அடுத்த வருடம் தொடக்கம் தரம் 8 இல் அறிமுகம் செய்யப்படவுள்ள புதிய பாடத்திட்டத்தின் ஒரு அங்கமாக மாணவர்களுக்கு பிறமொழி அறிவை கற்பிப்பதற்குக் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இதன் அடிப்படையில் தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு சிங்கள மொழியும், சிங்களமொழி மாணவர்களுக்கு தமிழ் மொழியும் இரண்டாவது மொழியாகப் போதிக்கப்படவுள்ளன.

இந்த இரண்டாம் மொழிப் பாடம் சம்பந்தமாக கல்வி அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கும் செயற்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# பிரார்த்தனை நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.20

இந்து சலாசார அமைச்சின் முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரனின் முதலாம் ஆண்டு பிரார்த்தனை நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (202)







கோப்பாய் லயன்ஸ் கழகம் தரம் 5 புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவித்து பரிசில்கள் வழங்கிய நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் நாவலரின் உருவச் சிலைக்கு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மாலை அணிவிப்பதை முதலாவது படத்தில் காணலாம். கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் உரை நிகழ்த்துவதையும்,

லயன்ஸ் கழக மாவட்டப் பிரதி பொருளாளர் எஸ்.தங்கராசா மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் அருகில் செயற்திட்ட இணைப்பாளர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா, லயன்ஸ் கழகப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் [illegible] நிற்பதையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

(படங்கள்:லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரை சேகரிக்கும் கழகங்களை பாடசாலைகளில் அமைக்கத் திட்டம்

கொழும்பு, டிச.20

பாடசாலை மாணவர்கள் மத்தியில் முத்திரை சேகரிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் பாடசாலைகளில் முத்திரை சேகரிக்கும் கழகங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் ஒத்துழைப்புடன் தபால் திணைக்களம் இந்தத் திட்டத்தை நாட்டின் அனைத்து பகுதிகளிலும் அமுல்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

இதன் பிரகாரம் மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட முத்திரை சேகரிக்கும் கழகங்கள் பாட சாலைகள் தோறும் அமைக்கப்படவுள்ளதுடன் இதற்கான ஆலோசனைகளும் உதவிகளும் பிரதேச தபால் அலுவலக உத்தியோகத்தர்களினால் வழங்கப்படவுள்ளன.

மாணவர்களின் பொழுது போக்கு முயற்சியாக முத்திரை சேகரிக்கும் பழக் கத்தை ஊக்குவிப்பதுடன் புதிதாக வெளியிடப்படும் முத்திரைகள் மற்றும் முதல் நாள் கடித உறைகள் என்பவற்றை உடனடியாகவே மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும் தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க பாரம்பரிய நினைவு முத்திரைகளை சேகரிப்பதை ஊக்குவித்து பாடசாலைகளுக்கு பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் பல்வேறு வகையான முத்திரைகளை உள்ளடக்கிய கண்காட்சி நிகழ்வுகளை மாவட்ட மட்டத்தில் நடத்துவதற்கும் தபால் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. (சி)


## EDWARD MAKES RED OINTMENT

றெட் ஒயின்மென்ற்

நீர்ச்சிரங்கு, புண், புரை, பருக்கள், கட்டு, படுவன், அக்கி, கிரந்தி அவியல், தலை அவியல், சொறி, தீச்சுட்ட புண், வெட்டுக்காயம், உரோஞ்சல், வட்டக்கடி, அரைக்கடி சகலதையும் குணமாக்கவல்லது.

றெட் ஒயின்மென்ற் எனக் கேட்டு வாங்குங்கள்
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

டாக்டர் காபிரியேல் எட்வேட் (L.A.M.P., R.I.M.P.)
வைத்தியாச்சாரி, வைத்தியபூபதி, கலாயோதி
63, குருசோ வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 021 222 8171
(80786) edward makes @ hotmail.com


## 9 ஆவது ஆண்டில்.........



திருமதி
சிவலோகநாயகி
குணபாலசிங்கம்

மலர்வு
28★05★1937

உதிர்வு
31★12★1999

திதி:- நவமி (20.12.2008)

ஒன்பது ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டு நீங்கா.

உம் நினைவில்:
கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உசன். (80911)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா சோமாஸ்கந்தன்

*(சிற்பனை முருகன் கோயில் பரம்பரை உரிமையாளர்)*



வேலணை மேற்கு, சிற்பனை முருகன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 50/30, செட்டித் தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சோமாஸ்கந்தன் நேற்று (19.12.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-பூரணம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா- செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும் ஸ்கந்தசிறி (நோர்வே), ஸ்கந்தமணி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூம்பாவை (கனடா), இராசாம்பிகை (கனடா), காலஞ்சென்ற சிவசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வென்ர (நோர்வே), மீனாம்பாள் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிறிவீரி, தோமஸ், அனோஜன், சுசி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சொர்ணலிங்கம் மற்றும் திருமணி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2008) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/30, செட்டித்தெரு,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (80957)

*தகவல்:*
குடும்பத்தினர்.

## திருமதி திருநாவுக்கரசு மனோன்மணி



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு மனோன்மணி 18.12.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரட்ணம்-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும் மனோரஞ்சிதா (யாழ்.மருத்துவ பீடம்), திருமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நேசமணி, நித்தியானந்தன்(ஓய்வு பெற்ற பொறியியலாளர், மலேசியா) ஆகியோரின் சகோதரியும் ஐங்கரனின் (யாழ்ப்பாணக்கல்லூரி) பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (18.12.2008) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றன. இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'திருமனோவாசா'*
*வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை.*

தகவல்:
பிள்ளைகள், பேரன்.

# கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.20

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவுக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட தவிசாளர்கள் முன்னிலையில் 23 கிளைக் கடைகளுக்கு முன்பாக கிளைக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப் படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(202-207)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்.வலயத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற முறைசாராக் கல்வி தொழில் திறன் பயிற்சி நெறிகளை மேற்கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (202)

## மணமகன் தேவை

யாழ். இந்து, கௌரவ குடும்பம், 1967 இல் பிறந்த, அரசதுறையில் உயர் பதவியிலுள்ள மணமகளுக்கு அரச, தனியார்துறையில் தொழில்புரியும் மணமகன் தேவை.

தொடர்பு:- 021 2264716 (80954)

## ஒத்துமாறல்

கொழும்பு தேசிய ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றும் ஆசிரியர் யாழ். மாவட்டத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார். விருப்பமுடையோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 021 4590211,
077 6510009
(80931)

## வேலையாள் தேவை

சங்கானையிலுள்ள புகைப்படக் கலையகத்துக்கு (ஸ்ருடியோ) கணனி அறிவுடைய (MS. offi ce, Photo shop, Typing) பெண் பணியாளர் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- "கஜன் போட்டோ அன் வீடியோ"
நிகரை வைரவர் ஆலய வீதி,
சங்கானை (சந்தைப்பகுதி).
(80947)

## திருமண சேவை

71 ஆம் ஆண்டு, செவ்வாய்க் குற்றம், பாவம் 80 உடைய லண்டன் மணமகனுக்கும், 75 ஆம் ஆண்டு B.Com செவ்வாய்க் குற்றமுடைய 35 பாவமுடைய மணமகனுக்கும், 76 ஆம் ஆண்டு 12 இல் செவ்வாய் 20 4/3 பாவமுடைய கனடா சிற்றிசன் மணமகனுக்கும், 79 ஆம் ஆண்டு, செவ்வாய் இல்லாத 41 Own Business உடைய மணமகனுக்கும் அழகான படித்த மணமகள் தேவை. மேலும் டாக்டர்கள், என்ஜினியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், லிகிதர்கள், வெளிநாட்டில் பிரஜா உரிமை பெற்ற மணமக்களும் பாவம் கூடிய, குறைந்த தகுதியான மணமக்களும் எம்மிடமுள்ளனர்.

தொடர்பு:- கமலக்கண்ணன் திருமணசேவை
[illegible]
(80943)


## ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE

NORTHERN EXTENSION
DUTCH ROAD, UDUVIL CHUNNAKAM

அசெம்பிளிஸ் ஒவ் கோட் வேதாகமக் கல்லூரி வட பிராந்தியம்.
*டச்சு வீதி, உடுவில் சுன்னாகம்.*
"Equip yourself to serve God"

Courses for Diploma in Theology for the academic year 2009
Application forms are available for new admissions.

| | |
|---|---|
| Closing Date for Application | 05.01.2009 |
| Registration & Interview | 10.01.2009 |
| Commencement | 13.01.2009 |

Modular Evening Courses on weekends.

Apply to

The Dean of Student Rev.P.Robert
Assemblies of God Bible College.
Northern Extension
Dutch Road, Uduvil
or
Assembly of God
No 5 cross Rd
Nallur, Jaffna.

Phone Fax - 009421 222 5501, 07791 94622
or 7308, 060 221 6886.
E.mail - surriraja @ sltnet.lk.
"Distinctively Pentecostal" (Accreditation with ATA).


# நினைவலைகள்

முதலாம் ஆண்டு | 19 ஆம் மாதம்



நிஜமாய் 06.01.1936
நிழலாய் 02.01.2008

நிஜமாய் 19.12.1943
நிழலாய் 26.05.2007

அமரர் பொன்னு பழனி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், இ.போ.ச.) திதி: நவமி 20.12.2008


திருமதி பழனி புவனேஸ்வரி திதி: தசமி

*இருவரும் எங்களை விட்டுப் பிரிந்தாலும்*
*உங்கள் நினைவலைகள் என்றென்றும்*
*எங்கள் இதயக் கூட்டை விட்டுப் பிரியாது*
*ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கும்.*

29, வைமன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

வை.சந்திரன் குடும்பம்.

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
19 . 08 . 1955

மறைவு
20 . 11 . 2008

## அமரர் மாணிக்கவாசகர் நவரேத்தினம்

*கடந்த 20.11.2008 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், அஞ்சலிப் பிரசுரம் வழங்கியோருக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (20.12.2008) சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

குறிப்பு:- இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

கே.கே.எஸ்.வீதி,
இணுவில் சந்தி, இணுவில்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுடன் யுத்தம் வெடிக்குமா?



## முப்படைத் தளபதிகளுடன் அந்தோணி அவசர ஆலோசனை
## உச்சக்கட்டத் தயார் நிலையில் எல்லைப் பாதுகாப்புப் படை!!

புதுடில்லி, டிச.20

முப்படைகளின் தயார் நிலை, அவற்றுக்கு கூடுதல் ஆயுதங்கள் வாங்குவது தொடர்பாக முப்படைத் தளபதிகளுடன் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி நேற்றுமுன்தினம் அவசர ஆலோசனை நடத்தியுள்ளார். பாகிஸ்தான் எல்லையிலுள்ள எல்லைப் பாதுகாப்புப் படையினரும் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். இதனால் பாகிஸ்தானுடன் யுத்தம் வெடிக்குமா என்ற எதிர்பார்ப்பு வலுவடைவதால் பெரும் பரபரப்பும் பீதியும் ஏற்பட்டுள்ளன.

கடல் வழியாக மும்பை நகருக்குள் நுழைந்து சுமார் 60 மணி நேரமாக தீவிரவாதிகள் நடத்திய நேரடித் தாக்குதலால் நாடே அதிர்ச்சிக்கு உள்ளானது. இதைத் தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் வெடிக்கும் நிலைமை உருவானது. அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளின் தலையீட்டைத் தொடர்ந்து சுமுக நிலை திரும்பியது.

இந்தச் சூழ்நிலையில், முப்படை அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சக உயர் அதிகாரிகளுடன் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் இராணுவத் தளபதி ஜெனரல் தீபக் கபூர், கடற்படைத் தளபதி அட்மிரல் சுரேஷ் மேத்தா, விமானப்படை தளபதி பாலி ஹோமி மேஜர், இராணுவச் செயலாளர் விஜய் சிங் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

ஒட்டு மொத்த பாதுகாப்பு நிலைமை, போர் வந்தால் முப்படைகளின் தயார் நிலை உள்ளிட்ட விடயங்கள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. முப்படைகளிலும் உள்ள தளபாடங்களின் நிலைமை மற்றும் கூடுதலாக ஆயுதங்கள், பாதுகாப்பு தொழில் நுட்பங்களை வாங்குவது குறித்தும் ஆலோசனை நடந்தது.

குறிப்பாக முப்படைகளுக்கு அவசரமாக தேவைப்படும் முக்கிய ஆயுதங்கள் எவை என்பது குறித்து பாதுகாப்பு அமைச்சர் ஆலோசனை நடத்தினார். இந்தியக் கடல்பகுதி, கடலோரங்களிலுள்ள முக்கிய இடங்கள், கடல் எல்லை ஆகியவற்றின் பாதுகாப்பு குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. அங்கு கூடுதல் பாதுகாப்பை மேற்கொள்ள அந்தோனி உத்தரவிட்டார்.

இந்தக் கூட்டத்தை தொடர்ந்து, கடலோரப் பாதுகாப்பு குறித்து மட்டும் தனியாக ஆய்வு செய்வதற்காக இன்று சனிக்கிழமை மற்றொரு கூட்டத்தை அந்தோனி நடத்த இருக்கிறார். இராணுவம், கடற்படை, விமானப்படை என அனைத்துப் பாதுகாப்புப் படைகளின் தயார் நிலைமை குறித்து அவர் ஆய்வு செய்து வருவதால் பாகிஸ்தானுடன் போர் மூளுமோ என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

இதற்கிடையே, பாகிஸ்தான் எல்லையை யொட்டி நிறுத்தப்பட்டிருக்கும் எல்லைப் பாதுகாப்புப் படையினர் அனைவரும் முழு உஷார் நிலையில் உள்ளனர்.



தீவிரவாதத்துக்கு எதிராக குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் கல்லூரி மாணவ, மாணவியர் நேற்றுமுன்தினம் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தினர். போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் வீதியோரத்தில் அணிவகுத்து நின்ற போது.....

## தீவிரவாதத்தை ஒழிக்க தேசிய பிரசாரம்-கலாம்

புதுடில்லி, டிச. 20



தீவிரவாதத்தை ஒழிக்க தேசிய அளவில் பிரசாரம் செய்ய வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் யோசனை தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடந்த கருத்தரங்கில் பார்வையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் அதனைத் தெரிவித்தார்.

தீவிரவாதம் இன்று மிகப் பெரிய சவாலாக உள்ளது. தீவிரவாதம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தீவிரவாதத்தை ஒழிக்க தேசிய அளவில் பிரசாரம் செய்ய வேண்டும். மக்களுக்குச் சரியான வழிகாட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக, இளைஞர்களுக்கு தீவிரவாதத்தின் கொடுமை குறித்து விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். இந்தியாவுக்கு மட்டுமின்றி உலக அளவில் தீவிரவாதம் அதிகரித்துள்ளது. மனித குலத்துக்கே ஆபத்தாக தீவிரவாதம் உள்ளது, கெட்ட நோக்கத்துக்காக தீய எண்ணங்கள் ஒன்று சேரும் போது நல்ல எண்ணங்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

தீவிரவாதச் செயல்கள் நடக்கும்போது அதை ஐ.நா. சபை அமைதியாக பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. தீவிரவாதத்தை ஒடுக்க ஐ.நா. சபையின் கட்டுப்பாட்டின் கீழ் சர்வதேச அளவில் சிறப்பு அதிரடிப்படை உருவாக்க வேண்டும் - என்றார்.

# ஈழத்தமிழ் ஆதரவு அக்கினிப்புயல் சீமானின் கார் நேற்றுத் தீக்கிரை!

## உலகத் தமிழர்கள் கொந்தளிப்பு

சென்னை, டிச. 20

ஈழத் தமிழர் ஆதரவு அக்கினிப்புயல் இயக்குநர் சீமானின் கார் நேற்றுக்காலை, சென்னையிலுள்ள அவரது வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது சில தீய சக்திகளால் தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளது.

இதனால் உலகெங்கும் வாழும் ஈழத் தமிழர்களும், ஈழத் தமிழ் ஆதரவாளர்களும், தமிழை நேசிப்பவர்களும் கடும் கோபமடைந்து, கொந்தளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வளசரவாக்கம் கேசவர்த் தினி பஸ் நிறுத்தம் அருகில் சீமானின் வீடு உள்ளது. நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இவரது காருக்கு யாரோ தீவைத்து விட்டு தப்பிச் சென்று விட்டனர். எரிந்த காரை அங்கிருந்தவர்கள் தண்ணீர் ஊற்றி அணைத்துள்ளனர்.

இதுகுறித்து சீமானின் உதவியாளர் வளசரவாக்கம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதன் பேரில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள். சீமான் விடுதலைப் புலிகளை ஆதரித்து தொடர்ந்து பேசி வருவதால் ஆத்திரம் அடைந்த காங்கிரஸார் சிலர்தான் அவரது



காரை எரித்தாலும் - சிறையில் அடைத்தாலும் - உயிரினைப் பறித்தாலும் யாருக்கும் தலைவணங்கி வாழாது நம் தமிழினம்.....

காருக்கு தீ வைத்து இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதைத் தொடர்ந்து சீமான் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

'தமிழர் எழுச்சி உரைவீச்சு' என்ற தலைப்பில் ஈரோட்டில் நடந்த பொதுக் கூட்டத்தில் இயக்குநர் சீமான் விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனை ஆதரித்தும் ராஜீவ்காந்தி படுகொலை பற்றி விமர்சனம் செய்தும் பேசினார்.

இதற்கு காங்கிரஸார் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். மத்திய அமைச்சர் இளங்கோவன், சட்டசபைக் காங்கிரஸ் தலைவர் சுதர்சனம், பீட்டர் அல்போன்ஸ் உள்பட பலர் சீமானுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளனர்.

இந்நிலையில் சீமானின் கார் எரிக்கப்பட்டிருப்பதால் காங்கிரஸாரே இதைச் செய்துள்ளனர் என்ற சந்தேகம் உறுதியாகியுள்ளது என மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

இந்நிலையில் நேற்றுப் பிற்பகல் சீமான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சீமானின் நடவடிக்கைகளை உளவுப் பிரிவுப் பொலிஸார் கண்காணித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியச் செய்திகள்

# சீமானின் உருவப் பொம்மையை எரிக்கமுயன்ற 25 பேர் கைது!

சென்னை, டிச. 20

இயக்குநர் சீமான், விடுதலைப் புலிகளை ஆதரித்தும் - ராஜீவ் கொலை பற்றி விமர்சனம் செய்தும் பேசியமையைக் கண்டித்து கோடம்பாக்கம் ஆற்காடு வீதியில் இளைஞர் காங்கிரஸ் சார்பில் உருவப்பொம்மை எரிப்புப் போராட்டம் நடந்தது.

இளைஞர் காங்கிரஸ் அலுவலகத்தில் இருந்து சீமானின் உருவப்பொம்மையை எரிப்பதற்காக வீதிக்கு எடுத்து வந்தனர். உடனே பொலிஸார் அதை எரிக்கவிடாமல் அவர்களிடமிருந்து பிடுங்கினார்கள். இதனால் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள். அங்கு சூழ்ந்து நின்ற பொலிஸார் உருவப்பொம்மையை எரிக்க விடாமல் பிடுங்கிச் சென்றனர்.

உடனே சீமானை கண்டித்து காங்கிரஸார் கோஷம் எழுப்பினர்கள். இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் எபிநேசர், ராதாகிருஷ்ணன், மகாவீர், முகமது அலி உட்பட 25 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிஜஸ சாக்கோ, சைதை நாகராஜ் ஆகியோர் பொலிஸ் டி.ஜி.பி., மற்றும் பொலிஸ் கமிஷனர் ஆகியோரிடம்முறைப்பாட்டுமனுக்கொடுத்தனர்.

இதன் பிறகும் சீமானைக் கைது செய்யாத பட்சத்தில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டமும், சீமானின் கொடும்பாவியை எரித்தும் கண்டனத்தைத் தெரிவிப்போம் - என்றனர்.

# ஈழத் தமிழர் பிரச்சினையில் தலையிடுக! பிரதமரைச் சந்தித்து கம்யூ. வலியுறுத்து

சென்னை, டிச.19

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும் - என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், சீதாராம் யெச்சூரி தலைமையில் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர்.

அப்போது பிரதமரிடம் அவர்கள் அளித்த மனுவின் விவரம் வருமாறு-

இலங்கையின் வடக்குப் பகுதியில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது. உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள்கூட கிடைக்காமல் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் துயரில் சிக்கியுள்ளனர்.

அவர்களின் பரிதாப நிலை குறித்து அங்கிருந்து வரும் செய்திகள் பெரும் கவலையை ஏற்படுத்துகின்றன. இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த மோசமான நிலை அறிந்து தமிழ்நாட்டு மக்கள் பெரும் துயரம் அடைந்துள்ளனர்.

இலங்கை இனப் பிரச்சினைக்கு பேச்சு மூலம் நிரந்தரமான அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்பதே மார்க்சிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு. ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாக அந்தத் தீர்வு அமைய வேண்டும்.

அத்தகைய தீர்வை எட்ட இந்திய அரசு தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள சாதாரண தமிழ் மக்களைப் பாதுகாக்க உடனடியாக அங்கு பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும். அதற்கு மத்திய அரசு தலையிட வேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

யெச்சூரியுடன் டி.கே.ரங்கராஜன், பி.மோகன் ஆகிய தமிழக எம்.பி.க்கள் உடன் சென்றிருந்தனர்.

# மாணவர்களின் பகிடிவதையால் முதலாம் வகுப்புச் சிறுவன் மரணம்

சென்னை, டிச. 20

சென்னை சோழிங்கநல்லூரில் 7 வயதுடைய முதலாம் வகுப்புச் சிறுவனை 7ஆம் வகுப்பு மாணவர்கள் தோப்புக்கரணம் போடவைத்துச் சித்திரவதை செய்தமையால் அச்சிறுவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

சோழிங்கநல்லூர் பரமேஸ்வரி நகர் கங்கையம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் இருனியா. இவரது மனைவி லேமா. இருவரும் சோழிங்கநல்லூரில் உள்ள ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் பணிபுரிகின்றனர். இவர்களது மகன் தேவதானம் (வயது - 7).

சோழிங்கநல்லூரில் அறக்கட்டளை மூலம் நடத்தப்படும் பாடசாலையில் முதலாம் வகுப்பு படித்து வந்தார். இந்த நிலையில் கடந்த 12ஆம் திகதி முதல் கடும் காய்ச்சலால் தேவதானம் பாதிக்கப்பட்டுள்ளார். இது குறித்து அவரிடம் பெற்றோர் விசாரித்தபோது தனது பாடசாலையில் 7ஆம் வகுப்புப் பயிலும் 3 மாணவர்கள் 100 முறை தோப்புக்கரணம் போடுமாறு வற்புறுத்தினர் எனவும், அதற்கு மறுத்த நிலையில் தன்னைக் கடுமையாக அடித்தனர் எனவும் கூறியுள்ளார்.

இதையடுத்து, தேவதானத்தை கேளம்பாக்கத்திலுள்ள ஒரு வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர் பெற்றோர். அங்கு அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் எழும்பூர் அரசு குழந்தைகள் நல வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லுமாறு கூறினர். இதன்படி எழும்பூர் அரசினர் குழந்தைகள் நல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட தேவதானம் கடந்த புதன்கிழமை உயிரிழந்தார்.

சிறுவனின் இறப்புக்கு சக மாணவர்களும், பாடசாலை நிர்வாகமும்தான் காரணம் என்றும், இதுதொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேவதானத்தின் தந்தை இருனியா துரைப்பாக்கம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தப் முறைப்பாட்டின் அடிப்படையில் வழக்குப் பதிவு [illegible] குறித்து பொலிஸார் [illegible]

# திருமங்கலத்தில் மும்முனைப்போட்டி; கடும் சூடு பிடிக்கிறது தேர்தல் களம்!

சென்னை, டிச. 20

திருமங்கலம் சட்டசபைத் தொகுதியில் தொகுதியில் பா.ஜ.க. போட்டியிடாது என்று அக்கட்சி அறிவித்துள்ள நிலையில், தி.மு.க - அ.தி.மு.க - தே.மு.தி.க. இடையே மும்முனை போட்டி உருவாகி இருக்கிறது. வேட்பாளர்கள் பெயர் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் களம் தற்போதே சூடு பிடித்துள்ளது.

மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டசபை தொகுதிக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் (ஜனவரி) 9ஆம் திகதி நடக்கிறது.

இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 15ஆம் திகதி தொடங்கியது. வரும் 22ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்ய கடைசி நாள்.


திருமங்கலம் தொகுதியில் லதாஅதியமான் தி.மு.க. வேட்பாளராக போட்டியிடுவார் என்று [illegible] ஏற்கனவே அறிவித்து விட்டார். தே.மு.தி.க. வேட்பாளராக தனபாண்டியன் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அ.தி.மு.க. வேட்பாளராக ம.முத்துராமலிங்கம் போட்டியிடுகிறார் என பொதுச்செயலாளர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் அறிவித்தார். முத்துராமலிங்கம் நேற்றுமுன்தினம் தனது வேட்பு மனுவை பகல் 12.50 மணிக்கு துணை தேர்தல் அதிகாரி சேதுராமனிடம் தாக்கல் செய்தார்.

முன்னதாக காலை 11.30 மணிஅளவில் தே.மு.தி.க. வேட்பாளர் தனபாண்டியன் தொண்டர்களுடன் ஊர்வலமாக வந்து வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.

திருமங்கலம் தொகுதியில் பா.ஜ.க. போட்டியிடாது என்று அந்த கட்சி அறிவித்துள்ளது. எனவே தி.மு.க., அ.தி.மு.க., தே.மு.தி.க. இடையே மும்முனை போட்டி உருவாகி இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இந்திய - இங்கிலாந்து கிரிக்கெட் டெஸ்ட்: முதலாம் நாள் ஆட்டம் மழையால் தடங்கல்

## கௌதம் கம்பீர் சதம்; டிராவிட் அரைச்சதம்

மொஹாலி, டிச.20

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 2ஆவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று மொஹாலியில் ஆரம்பமாகியது.

சென்னையில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய 2ஆவது டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. இதன்படி அதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கௌதம் கம்பீர் மற்றும் விரேந்தர் ஷேவாக் ஆகியோர் களமிறங்கினர்.

எனினும் அணியின் ஓட்ட எண்ணிக்கை 6 ஆக இருந்தபோது இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர் விரேந்தர் ஷேவாக் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் புரோட்டின் பந்தில் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார்.

அவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களமிறங்கினார் ராகுல் டிராவிட். இவர் அண்மைக் காலமாக சோபிக்கத் தவறிவரும் நிலையில், இந்த டெஸ்ட் போட்டி அவரது இறுதிச் சந்தர்ப்பமாக அமையலாம் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், சாதித்துக் காட்டவேண்டிய கட்டாயத்தில் களமிறங்கிய ராகுல் டிராவிட் தனது பழைய நிதானமான ஆட்டத்தை மீண்டுமொருமுறை வெளிப்படுத்தினார். அவர் 7 பவுண்டரிகள் அடங்கலாக அரைச்சதம் கடந்தார். மறுமுனையில் நிதானமாகவும் இடையிடையே அதிரடியாகவும் ஆடிக்கொண்டிருந்த கௌதம் கம்பீர் ஒரு சிக்ஸர், 12 பவுண்டரிகளுடன் சதம் விளாசினார்.

கம்பீர் - டிராவிட் ஜோடியைப் பிரிப்பதற்கு இங்கிலாந்து வீரர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். பந்துவீச்சாளர்களையும் களத் தடுப்பு வியூகங்களையும் மாற்றிக் கொண்டிருந்த இங்கிலாந்து அணித்தலைவர் கெவின் பீற்றர்சனின் முயற்சிகள் பலனளிக்கவில்லை. இந்த நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. அப்போது கம்பீர் 106 ஓட்டங்களுடனும் டிராவிட் 65 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

ஏற்கனவே இரு அணிகளுக்கும் இடையில் சென்னையில் நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றியீட்டியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தெ.ஆபிரிக்காவுடனான 2ஆவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி கணிசமான ஓட்டங்கள்

பேர்த், டிச.20

அவுஸ்திரேலியாவிற்கும் தென்னாபிரிக்காவிற்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவின் பேர்த்தில் நடைபெற்றுவருகிறது.

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்டதை தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 243 ஓட்டங்கள் என்ற நிலையிலிருந்து தொடர்ந்தது.

ஆட்டம் ஆரம்பித்து மேலும் 38 ஓட்டங்களுக்கு தனது எஞ்சிய இரண்டு விக்கெட்டுக்களையும் இழந்தது தென்னாபிரிக்கா. மார்க் பௌச்சர் 24 ஓட்டங்களுடனும், ஸ்ரெய்ன் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணியின் முதலாவது விக்கெட் 25 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹைடன் 4 ஓட்டங்களுடன் ஸ்ரெயினின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களம் புகுந்தார் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங். மறுமுனையில் நிதானமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்த சைமன் கடிச் 37 ஓட்டங்களுடன் கலிஸின் பந்தில் பௌச்சரிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்து மைக் ஹஸி வந்தார். எனினும் அவரும் 8 ஓட்டங்களுடன் நிற்னியின் பந்தில் போல்ட்டானார். அவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்துமைக்கல்கிளார்க்ஆடுகளம்நுழைந்தார்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 88 ஆக இருந்தபோது அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் 32 ஓட்டங்களுடன் ஹரிஸின் பந்துவீச்சில் பௌச்சரிடம் பிடிகொடுத்து வெளியேற்றப்பட்டார். அவரின் பின்னால் வந்தவர் அன்ரூ சைமண்ட்ஸ்.

இவர் கிளார்க்குடன் இணைந்து கணிசமான ஓட்டங்களைப் பகிர்ந்தார். அப்போது கிளார்க் 25 ஓட்டங்களுடன் ஸ்ரெயினின் பந்துவீச்சில் கலிஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


அவரது இடத்தை நிரப்புவதற்காக அவுஸ்திரேலிய அணியின் விக்கெட் காப்பாளர் களம் நுழைந்தார். இந்த நிலையில் 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த சைமண்ட்ஸ் ஹரிஸின் பந்தில் ஸ்மித்திடம் பிடிகொடுத்து வெளியேறினார். அடுத்து பிரெட் லீ வந்தார். அவரையும் 5 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் கலிஸ். லீயின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களமிறங்கினார் கிரெஜ்சா.

நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட் இழப்பிற்கு 228 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹடின் 39 ஓட்டங்களுடனும், கிரெஜ்சா 28 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ஸ்ரெயின், கலிஸ், ஹரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், நிற்னி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நான்காம் நாள் ஆட்டம் இன்று தொடரும்.



நேற்றைய முதல் நாள் ஆட்டத்தில் சதமடித்த சந்தர்போல்...

# நியூஸிலாந்துடனான முதல் டெஸ்ட்; மேற்கிந்தியத் தீவுகள் அணி 258/6

## சந்தர்போல் சதமடித்து அசத்தல்

நியூஸிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், நியூஸிலாந்து அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நியூஸிலாந்தின் நாபியர் விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அதன் ஆரம்ப வீரர்களாக அணித் தலைவர் கிறிஸ் கெய்ல், சட்டகூன் ஆகியோர் களமிறங்கினர். அணியின் முதலாவது விக்கெட் 43 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டது. 34 ஓட்டங்களுடன் அணித் தலைவர் கிறிஸ் கெய்ல் வெளியேறினார்.

தொடர்ந்து சர்வான் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்து மார்ஷல் வந்தார். இவரும் 6 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார்.

அடுத்து வந்த சந்தர்போல் அணியின் நிலை உணர்ந்து தனது நிதானமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார். ஆயினும் மறுமுனையில் இருந்த சட்டகூன் 72 பந்துகளை எதிர்கொண்டு 13 ஓட்டங்களையே பெற்றார்.

இந்த நிலையில் நாஷ் சந்தர்போலுடன் ஜோடி சேர்ந்துகொண்டார். இவர்கள் இருவரும் தமக்கிடையே 163 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்துகொண்டனர்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 237 ஆக இருந்தபோது சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி தனது அரைச் சதத்தைப் பூர்த்திசெய்திருந்த நாஷ் 74 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து ராம்டீன் ஆடுகளம் வந்தார். இவரும் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

எனினும் மறுமுனையில் இருந்த சந்தர்போல் தனது நிதான ஆட்டத்தினால் சதம் பெற்றார். இவர் 3 சிக்ஸர்கள் மற்றும் 9 பவுண்டரிகள் அடங்கலாக இந்தச் சதத்தைப் பெற்றார்.

நேற்றைய ஆட்டம் முடிவடையும் போது மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 258 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

சந்தர்போல் 100 ஓட்டங்களுடனும், ரெய்லர் 1 ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக டானியல் வெற்றோரி, பிறையன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், படேல், பிறாங்லின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடரும்.

# யுவராஜ்சிங் மீது புகார்



மொஹாலி, டிச. 20

மொஹாலியில் பாதுகாப்பு வலையத்தை மீறிச் சென்றதாக இந்திய கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங் மீது புகார் எழுந்துள்ளது. பாதுகாப்பு அதிகாரிகளிடம் தெரிவிக்காமல் தனது தந்தை நடத்தும் பெட்றோல் நிலையத்துக்கு அவர் சென்றதாக குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

மும்பையில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இங்கிலாந்து – இந்தியா இடையே நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களுக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

மொஹாலியில் நடைபெறும் டெஸ்ட் போட்டிக்காக அங்கு சென்றுள்ள வீரர்கள் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு யுவராஜ் சிங் பாதுகாப்பு அதிகாரிகளிடம் அனுமதி பெறாமல் அங்குள்ள தனது தந்தையின் பெட்றோல் நிலையத்துக்கு சென்றதாக பாதுகாப்பு அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

அங்கு தனது தந்தை மற்றும் நண்பருடன் சேர்ந்து யுவராஜ் சிங் மது அருந்தியதாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து கிரிக்கெட் வீரர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறும், பாதுகாப்பு வலையத்தை எந்த வீரரும் மீறக்கூடாது என்றும் அறிவுறுத்துமாறு பஞ்சாப் கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதனிடையே ஹர்பஜன் சிங் தனது நண்பர் ஒருவரைப் பார்க்கச் செல்ல அனுமதி கோரியதாகவும் ஆனால் பாதுகாப்பு அதிகாரிகள் மறுத்து விட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக சென்னையில் தங்கியிருந்த போது சகீர்கான் பாதுகாப்பு அதிகாரிகளுடன் மோதலில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் செல்லாது

புதுடில்லி, டிச. 20

பாகிஸ்தானில் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க இந்திய அணிக்கு அனுமதி மறுத்துள்ளது இந்திய மத்திய அரசு. இதையடுத்து தொடர் ரத்து செய்யப்படுவதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பிசிசிஐ) அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு ஜனவரி 4 முதல் பெப்ரவரி 28ஆம் திகதி வரை 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டி மற்றும் ஒரு 20 ஓவர் போட்டியில் பங்கேற்க இந்திய அணி திட்டமிட்டிருந்தது.

இதற்கிடையே, மும்பையில் கடந்த மாதம் தீவிரவாதிகள் நடத்திய பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக இந்தியா- பாகிஸ்தான் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. இதனால் திட்டமிட்டபடி கிரிக்கெட் தொடர் நடைபெறுமா என்ற சந்தேகம் எழுந்தது. எனினும், இந்திய மத்திய அரசே இறுதி முடிவு மேற்கொள்ளும் என பிசிசிஐ தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், தற்போதைய சூழலில் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் செல்ல வேண்டாம் என பிசிசிஐ-க்கு இந்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, விளையாட்டுத்துறை அமைச்சர் எம்.எஸ்.கில் ஆகியோர் கிரிக்கெட் சபைத் தலைவர் சசாங்க் மனோகரிடம் அரசின் முடிவை வியாழக்கிழமை தெரிவித்துள்ளனர்.

அரசின் முடிவு குறித்த கடிதம் விளையாட்டு அமைச்சகம் மூலம் பிசிசிஐ-க்கு வந்துள்ளது. அதன்படி பாகிஸ்தானுடனான கிரிக்கெட் தொடர் ரத்து செய்யப்படுகிறது. இம்முடிவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கும் தெரிவித்துள்ளோம்.

- என்றார் பி.சி.சி.ஐ. மூத்த அதிகாரி ராஜீவ் சுக்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாதீன ஐ.நா. மதிப்பீட்டுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை உருவாக்காமல் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முனைவது இலங்கையின் இன நெருக்கடிக்கு அடிப்படையாக உள்ள பிரச்சினை களுக்குத் தீர்வுகாண உதவாது என பிரிட் டன் தெரிவித்துள்ளது. அத்துடன் இத்த கைய நிலைமை வடக்கு மக்களின் மனங் களை வென்றெடுக்க அரசுக்கு உதவாது எனக் குறிப்பிட் டுள்ள பிரிட்டன், இலங்கை அரசு பின்பற்றும் வழிமுறைகள் குறித்து ஆழ்ந்த கவலையும் வெளியிட்டுள்ளது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பாக வியாழக்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரிட்டனின் இராஜாங்க, வெளிவிவகார, பொது நலவாய அலுவலக அமைச்சர் பில் றம்மெல் இவ்விடயங்களைத் தெரிவித்தார்.

''இலங்கை அரசுக்கும் உண்மையான கடப்பாடுகள் உள்ளன. அரசியல் தீர்வில் ஆர்வமாக உள்ளதை அது வெளிப்படுத்த வேண்டும். மனித உரிமைப் பாதுகாப்பை அது வலுப்படுத்த வேண்டும்'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவித்த அமைச்சர், எனினும் இலங்கையின் தென்பகுதியில் குண்டுத்தாக்குதல்களை மேற்கொள்வதை நிறுத்தியுள்ளமை, அவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டு ஜனநாயக கொள்கைகளில் தமக்குள்ள அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் விதத்தில் செயற்படத் தொடங்கியுள்ளமையைப் புலப்படுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் மனித உரிமை, மனிதாபிமான நிலை குறித்தும் ஆழ்ந்த கவலை வெளியிட்ட அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் மனித உரிமை நிலைவரம் மற்றும் மனிதாபிமான நிலை குறித்து பாரிய கரிசனை நிலவும் நேரத்தில் இது குறித்து விவாதிப்பது பொருத்தமானது.

### சரியான மதிப்பீட்டை செய்யமுடியவில்லை

மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு அரசசார்பற்ற அமைப்புகளும் ஊடகங்களும் செல்ல முடியாதுள்ளதால் சரியான மதிப்பீட்டை மேற்கொள்ள முடியாதுள்ளது.

இரு தரப்பும் எவ்வாறு சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறுகின்றன என்பது குறித்து பல அச்சம் தரும் அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வு எது என்பது குறித்து மூன்று சமூகங்களின் மத்தியிலும் முழுமையானவிவாதம்இடம்பெறவேண்டும்.

நாங்கள் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத முறைகளைக் கைவிட்டு ஜனநாயகக் கொள்கைகளுக்கான உண்மையான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துமாறு கோரினோம்.

இலங்கையின் தென் பகுதியில் பொது மக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறைவடைந்துள்ளமை அவர்கள் இந்தப் பாதையில் செல்வதைப் புலப்படுத்து கின்றது.

### அரசிடம் உண்மையான ஆர்வம்தேவை

இலங்கை அரசுக்கும் உண்மையான பொறுப்புணர்வுகள் உள்ளன. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான உண்மையான ஆர்வத்தை இலங்கை அரசு வெளிப்படுத்த வேண்டும்.

அரசியல் கட்சிகளை ஒரு மேசைக்குக் கொண்டுவரும் முயற்சிகளை நான் பாராட்டுகிறேன்.

அனைத்து இலங்கையர்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உரிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்

அரசியல் தீர்வை உருவாக்குவதற்கு முன்னர் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் அரசின் அணுகுமுறை வடக்கு - கிழக்கு மோதல் நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்களின் மனதை வெல்ல உதவாது. இனப்பிரச்சினைக்கு அடிப்படையான காரணங்களுக்குத் தீர்வுகாணவும் அது உதவாது.

இலங்கை அரசு பின்பற்றும் தந்திரோபாயம் குறித்து உண்மையான கவலைகள் உள்ளன. தற்போது அரசியல் தீர்வொன்றைக் காண்பது அரசின் நலனிற்கு உகந்ததாக அமையும்.

### இராணுவத்தின் முன்னேற்றம் பெருமளவில் இடப்பெயர்வை ஏற்படுத்தியுள்ளது

இலங்கையின் மனிதாபிமானச் சூழல் ஆழ்ந்த கவலையளிக்கின்றது. மோதல்கள் அதிகரித்ததும் இராணுவத்தின் முன்னேற்றமும் பெருமளவு இடம்பெயர்வை உருவாக்கியுள்ளன.

இறுதியான மதிப்பீடுகளின்படி 2 லட்சத்து 30 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பல குடும்பங்கள் மீண்டும் மீண்டும் இடம்பெயர்ந்துள்ளன. ஒவ்வொரு தொடர்ச்சியான இடம்பெயர்வும் மக்களை வறுமைக்குள்ளாக்குகின்றது.

மோதலால் பாதிக்கப்பட்ட மக்களிடம் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் முழுமையாக சென்றடைவதற்கான அனுமதியை வழங்குமாறு பிரிட்டன் தீவிரமாக வலியுறுத்தி வருகின்றது.

மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஐக்கிய நாடுகளின் தலைமையிலான மதிப்பீட்டுக் குழுவொன்று செல்வதற்கு அனுமதிக்குமாறு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றோம்.

இலங்கை அரசு வன்னியில் இனப்படுகொலை, விமானத் தாக்குதலை மேற்கொள்வதாகவும் அறிவித்தல்கள் வருகின்றன. இது குறித்து ஆராய்ந்து வருகிறோம். உணவு விநியோகங்கள் அந்த மக்களை சென்றடைவது தாமதமாகின்றது. இலங்கை அரசு குறிப்பிடத்தக்க பயங் கரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றது.

எனினும், மனித உரிமைகளை மதிப்பது பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் முக்கியமானது. - என்றார் அவர். (உ)


ஸ்ரீ ராம ஜெயம்



அருள்வளர்

**ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்**

**இணுவில், மருதனார்மடம், சுன்னாகம்.**

**இலட்சார்ச்சனை பெருவிழா**

சிந்தனைக் கரியோனாகி சிவனுருத்தாங்கிராம
மந்திர மூர்த்தியாகி வரும டியார்க் கெல்லாம்
பந்தனை நீக்கி வேண்டும் பலனெல்லாம் கொடுக்கும்
செல்வச் சுந்தர ஆஞ்சனேய சுவாமியே போற்றி போற்றி

அடியார்களே!

அஷ்ட திக்கிலும் ஆழிசூழ் அழகாபுரியில் யாழிசைமீட்டி பாணன் பரிசுபெற்ற புண்ணியபூமியில் ஈடில்லா இறைபக்தி சுரக்கும் இணுவில் மருதனார்மடத்தில்!

நெடிய மாயவனின் தசாவதாரத்தில் சூரிய வம்ச சுந்தரபுருஷன் மீது அன்புடைதாசன் பக்தியில் நெடுவுருத்தாங்கி நின்ற திருக்கோல சுந்தர ஆஞ்சனேய சுவாமியின் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா!

நிகழும் சர்வதாரி வருஷம் மார்கழித் திங்கள் 1ம் நாள் (06.12.2008) செவ்வாய்க்கிழமை முதல் மார்கழித் திங்கள்12ம் நாள் (27.12.2008) சனிக்கிழமை வரையான தினங்களில் இருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. வேண்டத்தக் கதறிந்து வேண்ட முழுதும் தரும் தியான வேள்வியின் நாயகனை வேளையெல்லாம் வணங்கி வேண்டும் வரம் பெறுவோம்.

அவசரணை:- திருமுருகன் கொம்நெற், கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### குமாரசாமி சிவசுப்பிரமணியம் (C.S. Master)

(ஓர்வுபெற்ற உப அதிபர், வட்டு.இந்துக் கல்லூரி)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை நிரந்தர வசிப்பிடமாவும் இல.37, ரத்தினகார பிளேஸ், தெகிவளையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சிவசுப்பிரமணியம் நேற்று (19.12.2008) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - இராசம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மருமகனும் தனபாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் சிவகுமாரன், கௌரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஸ்ரீதரன் (Sri Lanka Telecom, Colombo) இன் அன்பு மாமனாரும் மயூரியின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் சகோதரரும் சேதுகாவலரின் சித்தப்பாவும் திருமதி மங்கையர்க்கரசி, திருமதி இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற திருமதி சறோஜினிதேவி, கந்தசாமி - தேவகி தம்பதியினர் (London), சண்முகராஜா - ராஜிமலர் தம்பதியினர் (Canada) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற திருச்செல்வம், காலஞ்சென்ற சண்முகநாதன், இராமநாதன் ஆகியோரின் சகலனும், வாகீசன் (Canada), மிருணாளினி (USA), கீத்தா (UK) ஆகியோரின் பெரியப்பாவும் UK இல் வசிக்கும் Dhylan, Tashen, Donathan மற்றும் Canada வில் வசிக்கும் அனுஷா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை 37, ரத்னகார பிளேஸ், தெகிவளை இல்லத்தில் நடைபெற்று மு.ப. 9.30 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.ஸ்ரீதரன் (மருமகன்)
T.P.2727328, 2713628

## மரண அறிவித்தல்கள்

### இராசையா பாறுவதி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பாறுவதி 18.12.2008 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - ஐயாத்தைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - தையலம்மை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம், நாகம்மா மற்றும் தில்லைநாதன் (பரராசசிங்கம்), தெய்வானை, கனகமணி, தில்லைநாயகி (மணி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அரசரெத்தினம், மருதலிங்கம், காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் செல்வரத்தினம், செல்வராணி, விஜயலெட்சுமி, மருதையனார், விக்னேஸ்வரன், ஸ்ரீகந்தராசா (ஸ்ரீ), யோகேஸ்வரி, கனகரத்தினம், நகுலேஸ்வரி, நகுலேஸ்வரன், காலஞ்சென்ற குனேஸ்வரி மற்றும் யோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசீலா, சரோஜினிதேவி, காஞ்சனாதேவி, ஆனந்தாதேவி, அம்பாலிகை, புனிதவதி, சுதர்சனா, கனகாம்பிகை, மதிவதனா, துரைரத்தினம், கனகரத்தினம் (கண்ணன்), செல்வராசா, காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இராமநாதபுரத்தில் நேற்று முன்தினம் (18.12.2008) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

311/1 பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
நா.கண்ணன் (சென்.ஜோன்ஸ், கல்லூரி யாழ்ப்பாணம்)

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(பௌராணிகர்- சுப்பப்பா)

சாஸ்திரியார் வளவு, புற்றளை, புலோலியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை-கணபதிப்பிள்ளை சுவாமிப்பிள்ளையின் மகனும், பார்வதிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, சங்கரப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் கணேசலிங்கம், உபயலிங்கம், சிவஞானதேவி, கணேசமூர்த்தி, செல்வநாயகம், மாறன், உமாதேவா, சந்திரகுமார், திலகவதி, மகேஸ்வரி ஆகியோரின் சிறியதந்தையும், சதாசிவம், செல்லம்மா, இராசம்மா, சிவபாதசுந்தரம், பாலசுந்தரம், நடராசா, சண்முகநாதன், ருக்குமணி, சத்தியபாமா, இந்திராகாந்தி, சிவயோகநாதன், யோகேஸ்வரி, ராதாதேவி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனை விழுந்தான் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புற்றளை,
புலோலி.

தகவல்:
த.கணேசலிங்கம்
(பெறாமகன்)

### துரையப்பா சுப்பிரமணியம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடா ஸ்காபரோவை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா சுப்பிரமணியம் 17.12.2008 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கண்மணி தம்பதியினரின் மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரனின் அன்புத் தந்தையும் பவியின் அன்பு மாமனாரும் பொன்னுத்துரை, காலஞ்சென்றவர்களான லக்ஷ்மி, கோபாலப்பிள்ளை, நடராஜா, கந்தசாமி, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற புவனேந்திரன் மற்றும் தவமணிதேவி ஆகியோரின் சம்மந்தியும் ராசலிங்கம், அன்னம்மா, வசந்தாதேவி (குஞ்சு), சத்தியபாமா, சுந்தரேஸ்வரி, காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, வெற்றிவேல், லக்ஷ்மி மற்றும் மங்கையர்க்கரசி, விசுவலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் லக்ஷ்மணபிள்ளை, பூலோகம் ஆகியோரின் அன்புச் சகலனும் கண்ணம்மா, பத்மா, கமலாதேவி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் சங்கவி, அபிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (20.12.2008) சனிக்கிழமை இல.3280 Sheppard Ave, East இல் அமைந்துள்ள Highland Funeral Home இல் பி.ப. 5 மணி முதல் 9 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 21.12.2008 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.30 மணிமுதல் மு.ப. 9.30 மணி வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
தர்மசீலன் - சுவிஸ் 0041 788201385
விக்கினேஸ் - கனடா 0016478943432

தகவல்:
பூ.ஸ்ரீதரன்
(புளியங்கூடல்).




கண்கவரும் தெரிவுகளுக்கு முந்துங்கள்

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு காவேரியில் அசத்தலான மலிவு விற்பனை தொடர்கிறது

சகல புடைவை வகைகளையும் மிகக் குறைந்த விலையில் அள்ளிக் கொள்ள....

**காவேரி சில்க்ஸ்**

இல 48, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடை திறந்திருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்,

# பெற்றோல் தட்டுப்பாடு தொடர்கிறது

கொழும்பு, டிச. 20

நாட்டின் பல மாவட்டங்களிலும் பெற்றோல் தட்டுப்பாடு நிலவி வருவதனால் மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

நேற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களும் மக்களும் நீண்ட வரிசையில் பெற்றோலுக்காகக் காத்திருந்தனர். காத்திருந்த சிலருக்குப் பெற்றோல் கிடைக்காத நிலையும் ஏற்பட்டது.

பெற்றோல் இல்லாதமையாலும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தினாலும் அலுவலர்கள் கடமைக்குப் போவதில் தாமதங்கள் ஏற்பட்டன. அத்துடன் ஓட்டோ சாரதிகளும் மிகவும் பாதிப் படைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றும் வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருந்தன. சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் இல்லை என்ற அறிவிப்புப் பலகை தொங்கவிடப்பட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

## சித்தாண்டியில் கிளைமோர் இரு படையினர் காயம்

மட்டக்களப்பு, சித்தாண்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர் என்று பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

காயமடைந்த இருவரும் பொலநறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல்களை நடத்தினர்.

## போர் தொடர்ந்தும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பினால்தான் போர் நிறுத்தத்தை பிரகடனப்படுத்துவது எனும் நிலைப்பாட்டில் அரசு உறுதியாக உள்ளது. அப்படியான ஒரு நிலை இல்லாத நிலையில் போர் நிறுத்தம் எதுவும் இல்லை - என்றார். (அ-சி)

## வன்னியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணவு வழங்க செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மழை, வெள்ளத்தால் சுமார் இரண்டு லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-1)

## உயர் நீதிமன்றத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து உயர் நீதிமன்றத்தின் உத்தியோகபூர்வ பிரதி கிடைக்கவில்லை என்று அமைச்சரவைக் கூட்டம் முடிவுற்ற பின்னர் அரசுத் தரப்பால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டம் அன்றைய தினம் இரவு 8.00 மணிவரை நடைபெற்றது தெரிந்ததே.

## பெற்றோல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமைத்துவப் பணிப்பாளர். சுரேஸ்குமார் நேற்றிரவு ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

பெற்றோல் விலைக்குறைப்புத் தொடர்பில் சகல ஐ.ஓ.சி. கிளை நிறுவனங்களுக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இன்னும் பெற்றோலின் விலையைக் குறைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## முறிகண்டியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, முல்லைத்தீவு, முள்ளியவளை பூதன்வயல் பகுதி மக்கள் குடியிருப்பு மீது எம்.ஐ. - 24 ரக ஹெலிக்கொப்டர் நேற்று தாக்குதல் நடத்தியுள்ளது என்றும், இத்தாக்குதலில் பொதுமக்களின் வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் கூறப்படுகிறது.

## முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் தாழ்வாகப் பறந்து விமானங்கள் தாக்குதல் நடத்தியமையால் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதிகளில் க.பொ.த. சாதாரணதரத் தேர்வு எழுதிய மாணவர்கள் அச்சத்தினால் பாடசாலையைவிட்டு வீதியில் அலறியடித்து ஓடினர்.

இத்தாக்குதலினால் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது:

பி.கேசியா (வயது 13), சா.சுபாசினி (வயது 20), கேசவன் (வயது 16), மருதன் (வயது 22), சித்திரா (வயது 15), சாவித்திரி (வயது 15), தேவப்பிரியா (வயது 16), குபேரன் (வயது 09), நாகமணி (வயது 45), தேவராசா (வயது 50), மருதநாயகம் (வயது32) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (சி)

## முல்லை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலில் மக்களின் வீடுகள் பல சேதமடைந்துள்ளன என்றும் கூறப்படுகிறது.

படையினரின் ஷெல் வீச்சில் இரண்டு ஷெல்கள் முல்லைத்தீவு வைத்தியசாலை வளாகத்திற்குள்ளும் வீழ்ந்து வெடித்துள்ளன என்றும், இதில் வைத்தியசாலை ஊழியர்களான முல்லைத்தீவினைச் சேர்ந்த சண்முகராசா பிரதீப் (வயது - 24), தருமபுரம் கட்டைக்காட்டைச் சேர்ந்த வேதவனம் (வயது - 42) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன. (அ-சி)

## போதிய அளவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பௌஸி என்னிடம் கூறினார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான களஞ்சியத்தில் போதுமான அளவு பெற்றோல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்று மக்கள் பயப்படத் தேவையில்லை. தற்போது மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் சென்று பெற்றோலைத் தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம். பெற்றோல் விநியோகத்தைச் சீர்செய்வதற் காக அமைச்சர் பௌஸி எரிபொருள் நிரப்பு நிலையங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி வருகின்றார் - என்றார். (அ-சி)

## சீமான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணங்களை நீதிமன்றத்தில் விளக்கிய பொலிஸார், அவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 505, சட்டத்திற்கு எதிரான செயல்கள் தடுப்புச் சட்டத்தின் 13 (1) பிரிவு ஆகியவற்றின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கின்றன எனத் தெரிவித்தனர்.

அதைப் பதிவு செய்த நீதிபதி, இது தொடர்பான விபரங்களை சீமான் மற்றும் கொளத்தூர் மணியிடம் தெரிவித்தார். தொடர்ந்து இருவரையும் இம்மாதம் 31 ஆம் நாள் வரை நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட்டார். அதன் பின் இருவரும் கோவை சிறைக்கு கொண்டு சென்று அடைக்கப்பட்டனர்.

நீதிமன்ற வளாகத்திலிருந்து சீமானும், கொளத்தூர் மணியும் வெளியே அழைத்து வரப்பட்ட போது பொலிஸாரைக் கண்டித்து தமிழ் உணர்வாளர்கள் போராட்டம் நடத்தினர்.

இப்போராட்டத்தின் போது பொலிஸாரின் ஜீப், தனியார் கார் உட்பட பல வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இது தொடர்பாக 18 பேர் கைது செய்யப்பட்டனர்.

சென்னையில் கைது செய்யப்பட்ட மணியரசன் இன்று காலை ஈரோடு நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படுகிறார் எனத் தெரிகிறது.

இதேவேளை, இவர்களின் கைதுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன், கம்யூனிஸ்ட் கட்சின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (அ-சி)

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற அறிவிப்பு வெளிவந்தபின் முகவர்கள் பெற்றோலை கொள்வனவு செய்யப் பின்னடித்தனர். ஆனால் நேற்றுத் தொடக்கம் மீண்டும் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர்.

குடாநாட்டில் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு நிலவுவதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை என்றும் அவர் விவரித்தார்.

இதேவேளை-

குடாநாட்டில் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக நேற்றுப் பகலில் பரவலாக பேசப்பட்டது.

அநேகமான பெற்றோல் நிலைய முகவர்கள் கொள்வனவை நிறுத்தியதாலேயே இந்த நிலை ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

பெற்றோலின் விலை குறைக்கப்பட்டால் நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டிய காரணத்தாலேயே முகவர்கள் கொள்வன வில் பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அத்தகைய நிலை நேற்றுப் பிற்பகலில் நீங்கிவிட்டதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1-224)

## பெற்றோல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பெற்றோல் விலையைக் குறைக்குமாறு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அரசு உடன் நடைமுறைப்படுத்தவேண்டும். நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நீதிமன்றத்தீர்ப்பை மீறுவதற்கு ஜனாதிபதி முயல்கின்றாரா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

கஷ்டப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்கு வதற்காக நீதிமன்றம் நல்லதொரு தீர்ப்பை வழங்கியுள்ளது. ஆனால் அரசு இடம்கொடுக்க மறுக்கிறது.

ஐ.தே.க. தேசத்துரோகக் கட்சி என்று அரசு இவ்வளவு காலமும் கூறிவந்தது. பெற்றோலின் விலையைக் குறைக்க மறுப்புத் தெரிவித்ததன் மூலம் அரசுதான் உண்மையான தேசத்துரோகியாக மாறிவிட்டது. எமது முயற்சியின் பலனாக நீதிமன்றத் தீர்ப்பு மக்களுக்கு சாதகமாக அமைந்துள்ளது. அரசு உடன் பெற்றோல் விலையைக் குறைக்காவிட்டால் நாம் மீண்டும் நீதிமன்றம் செல்வோம். மக்களும் செல்வார்கள்.

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் விசாரணைத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அரசு முடிவெடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது. இது சிறுபிள்ளைத்தனமான முடிவு.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவ்வாறான சிறுபிள்ளைத்தனமான முடிவை எடுக்கமாட்டார் என்று நாம் நம்புகின்றோம் - என்றார் (சி)


## அன்பு வெளியீடு

தரம் - 5 புலமைப் பரிசில்
பரீட்சை வினாத்தாள்கள் -2009

ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின் தரம்-5 மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் வெளிவருகின்றன.

★முதலாவது பரீட்சை 21.12.2008 ஞாயிற்றுக்கிழமை வெளிவருகின்றது. வினாத்தாள்களைப் பெறவிரும்பும் தனியார் கல்வி நிலையங்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

★பாடசாலைகளுக்கான வினாத்தாள்கள் தை மாதம் வெளிவருகின்றன.

நேரடித்தொடர்புகளுக்கு

அன்பொளி கல்வி நிலையம், சாவகச்சேரி.
அன்பொளி கல்வியகம், யாழ்ப்பாணம்.

## அன்பு வெளியீடு

தரம் - 4 மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் மாதிரிப் பரீட்சைகள் - 2009

★ வினாத்தாள்களைப் பெற விரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★நேரடித்தொடர்புகளுக்கு

அன்பொளி கல்வி நிலையம், சாவகச்சேரி.
அன்பொளி கல்வியகம், யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH WITH GRAMMAR
BY:V.A.SASIKUMAR (B.A., NDE)
புதிய பிரிவு ஆரம்பம் 21.12.2008 ஞாயிறு 4P.M.
NOTE:இம்மாதம் கட்டணம் இலவசம்
N.C.A. கல்வி நிலையம் இணுவில்

## வெளிவந்துவிட்டது

2009 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தரம்:5 மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டம்
அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்கிய 2009ற்கு மாற்றமடைந்த புதிய பாடத்திட்டம்
ஆசிரியர்கள்,வழிகாட்டுநர்கள், பெற்றோர்கள்,மாணவருக்கானது
குறைவான பிரதிகளே வந்துள்ளன
கிடைக்குமிடங்கள் விலை: ரூபா :120.00
பூபாலசிங்கம் புத்தகசாலை.யாழ்நகர்
அன்னை புத்தகசாலை.யாழ்நகர்
துர்க்கா புத்தகசாலை.சுன்னாகம்
மொடேன் புத்தகசாலை.நெல்லியடி
சயன்ஸ் அக்கடமி.நல்லூர்.


## முதலாம் ஆண்டு சிரார்த்த தின அழைப்பு



சர்வசித்து வருடம் மார்கழி மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (01.01.2008) அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு

**அமரர் தாதபிள்ளை தங்கம்மா**

அவர்களின் முதலாம் ஆண்டு சிரார்த்த தினக் கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (20.12.2008) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிள்ளைகள்
67/1, அ[illegible] வீதி, [illegible] கிழக்கு, யாழ்ப்பாணம்.
0776848343
தொ.பே.: 021 222 9595, 021 222 7485, 021 222 8244,

## மரண அறிவித்தல்

**நாகநாதி வைத்திலிங்கம்**
(புளியங்கூடல்)


புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி வைத்திலிங்கம் நேற்று (19.12.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

230, பேர்.பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
தொ.பே. 9874

தகவல்:
வை.குகதாசன்

## 47 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**ஆறுமுகம் சண்முகராசா**

தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர்- நலன்புரிச் சங்க அங்கத்தவர்களான ச.செந்தூரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்- சாவகச்சேரி நகரம்) அவர்களின் அன்புத் தந்தையும், திருமதி செ.கேதா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்கத்தானை) அவர்களின் அன்பு மாமனாருமான அமரர் ஆறுமுகம் சண்முகராசா அவர்கள் 04.11.2008 அகாலமரணமானார். இவரின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரதேச செயலகம், தென்மராட்சி.
பிரதேச செயலக ஊழியர், நலன்புரிச் சங்கத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி சிவசுப்பிரமணியம் மனோரஞ்சிதாஈஸ்வரி (பேபி)**

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் பத்தானை, அல்வாய் கிழக்கு, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் மனோரஞ்சிதாஈஸ்வரி நேற்று (19.12.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.சிவசுப்பிரமணியம் (கணவர்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org